Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (26-8-66) இதழ் 196

பராபவ ஆவணி 10 ஜு அவ்வ 9 வெள்ளிக்கிழமை




## மகாராணியை பிரதமர் சந்திப்பார்

கொழும்பு, வியாழன்

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அடுத்த மாதம் 26-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை எலிஸபெத் மகாராணியாரை லண்டன் பக்கிங்காம் மாளிகையில் சந்திப்பார்.

கடைசியாகப் பிரதமர் லண்டன் சென்றிருந்த சமயம் எலிஸபெத் மகாராணியார் அவரை அழைத்திருந்த மதியபோசன விருந்துபசாரம் பிரதமருக்கு திடீரென்று ஏற்பட்ட சுகவீனம் காரணமாக ரத்துச்செய்யப்பட்டது.

# நாடற்ற பிரஜைகளுக்கு பாரதம் உதவ முடியாது

## சுவாமிநாததம்பிரான் சுவாமிகளால் இலங்கை பெருமையடைகிறது

### நீதியரசர் புகழ்மாலை

யாழ்ப்பாணம், வெள்ளி

சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் திருக்கேதீச்சரத்தில் ஒருவிழா நடைபெற்றது. அந்தவிழாவிலே எமது மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன சுவாமிகளும் கலந்துகொண்டார்கள் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசாவும் சமூகம் தந்திருந்தார். அப்பொழுது நான் ஒரு பாட்டுப் பாடினேன், அந்தப்பாடல் பாபநாசம் சிவனுடையது. அதைப்பாடும்பொழுதே இந்த பூமிக்கும் சுமையாக இருக்காமல் துறவியாகி இறைவனுக்கு பணிபுரியவேண்டும் என்ற எண்ணம் எமக்குத்தோன்றிவிட்டது'' இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகள் நேற்று மாலை வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற பிட்டுக்கு மண்சுமந்த விழாவில் 'பிட்டுக்கு மண் சுமந்த பெருந்தகை' என்னும் கதாப் பிரசங்கத்தை ஆரம்பிக்குமுன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக் கதாப்பிரசங்கத்துக்கு நீதியரசர் திரு. பொ ஸ்ரீஸ்கந்தராஜா தலைமை வகித்தார்.

சுவாமிகள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

'மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம் செய்து வரும் பணிகளையே அதன் கிளையாகிய எமது ஆசிரமமும் செய்யவிருக்கிறது. அங்கே நடைபெறும் பஜனையை இந்தக் கோவிலிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலும் ஆரம்பிக்க இருக்கிறேன். இன்னும் கூட்டு வழிபாடு ஒன்றையும் தொடங்கவிருக்கிறேன். அதற்குச் சிறந்தது நமது நாயன்மார்கள் அருளிய தேவாரத் திருமுறைகளே அவ் வழிபாட்டில் ஓதப்படும். அத்துடன் சிவஞான சித்தியார் வகுப்பு ஒன்றையும் நடத்தவிருக்கின்றேன். பணிகளிற் சிறந்த பணிகள் இந்தப் பணிகளே இவைகளைச் செய்வதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

நீதியரசர் திரு. பொ, ஸ்ரீஸ்கந்தராசா தமது தலைமையுரையில் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்குச் சென்று துறவியான முதல் இலங்கையர், நமது சுவாமிகளே. அதனால் நமது ஈழநாடே பெருமைப்படுகிறது. அவர் துறவியானதால் சைவசமயமே புத்துயிர் பெற்றிருக்கிறது. அவரது சேவை நாடெங்கும் பரவ வேண்டும் என்று கூறினார். திரு. சோ. இராசரத்தினம் திரு. அம்பிகைபாகன் ஆகியோரும் அவரைப் பாராட்டிப்பேசினர்.

## பிரச்னைகளைத் தீர்க்க இலங்கை அரசாங்கத்தையே நாடுக

### இலங்கை-இந்தியர்சங்க வரவேற்பில் இந்திய ஹைகமிஷனர் சச்சார் கருத்து

— நமது நிருபர் எஸ். சபாரெத்தினம் —

யாழ்ப்பாணம், வெள்ளி

'இலங்கையில் வாழும் நாடற்ற பிரஜைகளுக்கு இந்திய அரசாங்கம் எவ்வகையிலும் உதவமுடியாது. அவர்களை இலங்கை அரசாங்கமே கவனிக்கவேண்டும். அவர்கள் தமது பிரச்னைகள் பற்றி இந்நாட்டு அரசாங்கத்துடனேயே தொடர்பு கொள்ளவேண்டும்' என்று இங்குள்ள இலங்கை—இந்தியர் சங்கத்தினால் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில், இந்திய ஹைகமிஷனர் திரு பீம்சென் சச்சார் பேசுகையில் கூறினர்.

இந்திய நாட்டிலிருந்து சட்டவிரோதமாக யாரும் குடியேறுவதை இந்தியா அடியோடு கண்டிக்கிறது. அப்படிக் குடியேறுபவர்களைத் தடுக்கும் முயற்சியில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இங்குள்ள ஒவ்வொரு பிரஜையும் சட்டவிரோதக் குடியேற்றத்தை ஒழிக்கும் முயற்சியில் இந்தியாவுடன் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும். இந்திய நாட்டின் ஒரு தூதுவன் என்ற முறையில் நான் இதைக் கூறுகின்றேன்'' என்றும் திரு. சச்சார் குறிப்பிட்டார்.

''இந்தியப் பிரஜாஉரிமை பெற்று இந்தியா திரும்புபவர்களுக்கு இந்திய அரசாங்கம் வேண்டிய உதவிகளைச் செய்துவருகிறது. 1964-ம் ஆண்டில் 5000 பேருக்கு மேல் இந்தியப் பிரஜா உரிமை பெற்று 3000 பேர வரை தாய் நாட்டுக்கு போய்விட்டனர். இந்தியா ஏற்றுக்கொண்டபடி 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் இன்னும் 15 வருடங்களில் போயாகவேண்டும். 9 லட்சத்து 75 ஆயிரம் பேரில் இதுவரை 3 லட்சம் பேர் இதுவரை இலங்கைப் பிரஜைகளாகியுள்ளனர் என்றும் திரு. சச்சார் சொன்னார்.

திரு. சச்சார் மேலும் பேசுகையில் இங்கு வாழும் இந்தியர்கள் தமக்குள் ஒற்றுமையும் நல்லுறவுமின்றி வாழ்வதாகத் தாம் அறிவதாகவும் அவ்வாறில்லாமல் எல்லோரும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டுமென்றும், இங்கு வாழும் பெண்கள் தம் கணவர்களிடம் வாணும் இக்குறைபாட்டை போக்க முயலவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜனத்தொகைக்கு ஏற்ப அபிவிருத்தி இல்லை

### ஆஸ்பத்திரி நிலைமைகள்பற்றி சுகாதார மந்திரி

கரணதொட்டை, புதன்

நாட்டிலுள்ள ஏராளமான ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களின் எண்ணிக்கை பெருகி இருப்பதும், அவர்களில் அனேகர் கட்டில்களின் அடியிலேயே படுத்து உறங்குகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். கடந்த பல ஆண்டுகளாக ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ற வகையில் ஆஸ்பத்திரி நிலைமைகள் சீர்திருத்தப்படாமைதான் இதற்குக் காரணம்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன மகியங்கனையில் புதிய ஆஸ்பத்திரியொன்றுக்கு அடிக்கல் நாட்டிய போது கூறினர்.

அரசாங்கம் புதிய ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்கென ஏராளமான நிதி ஒதுக்கின்றது. அப்படிக்கட்டப்படும் ஆஸ்பத்திரிகளில் மகியங்கனை ஆஸ்பத்திரியும் ஒன்று என்று மந்திரி கூறினர்.

மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகிடைப்பதற்கான ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்து வருகிறோம் வெகுவிரைவில் வெளிநாடான ஆஸ்பத்திரிகளிலும் வைத்திய நிபுணர்களின் சேவைகிடைக்க வழிசெய்யப்படும் என்றும் மந்திரி கூறினார்.

## சுகர்ணோவுக்கு 2 மாதவிடுமுறை!

### எதிர்ப்பு நடவடிக்கைகளின் எதிரொலி?

ஜாகர்த்தா, ஆக. 25

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்னோ அண்மையில் இங்கு நிகழ்த்திய சுதந்திரதின உரையைத் தொடர்ந்து உச்சக்கட்டத்தை அடைந்திருந்த சுகர்னோ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், இன்று அவருக்கு வழங்கப்பட்ட இரண்டுமாதகால விடுமுறையுடன் அமைதிகொண்டதாக ஜாகர்த்தாவில் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

சுகயீனம் காரணமாக அதிபர் சுகர்னோவுக்கு இரண்டு மாதகால விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதென்றும் அவர் விரும்பினால் வெளிநாடு செல்லலாமென்றும் இன்று இங்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பார்லிமெண்ட் கூட்டம் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஐயாயிரத்துக்குமதிகமான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டு பார்லிமெண்டை நெருங்கினர். இதனைத் தொடர்ந்து பார்லிமெண்ட் கூட்டம் இடையில் நிறுத்தப்பட்டு மாணவர் கோஷ்டியொன்று உள்ளே அனுமதிக்கப்பட்டது.

முன் வந்த செய்தி

(5-ம் பக்கம் பார்க்க)

## உதவி என்ஜினியர் விழுந்தார் குழப்பத்தில் மற்றவர் விழுந்தார்

### இருவரும் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு, வியாழன்

அநுராதபுரத்திலுள்ள மகாகந்தராவா பாலத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்த உதவி என்ஜினியர் திரு. கி. காளிதாசா ஆற்றுக்குள் தடுக்கிவிழுந்து காயங்களுக்குள்ளானதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்ப நிலையால் அநுராதபுர புகைபிரத நிலைய உதவி என்ஜினியர் திரு. எல். டபிள்யு. டி. சில்வா அதே பாலத்தில் தடுக்கிவிழுந்து காயத்துக்குள்ளானர்!

இப்போது இவ்விருவரும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாலத்தில் மாற்றம் செய்வது சம்பந்தமாக திரு. காளிதாசா பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது ஆற்றுக்குள் விழுந்துவிட்டார். இதனை எவரும் பார்க்கவில்லை. திரு. காளிதாசாவைக் காணாத ஒரு தொழிலாளி அவலக்குரல் எழுப்பினர். ஆற்று நீருக்குள் பார்த்த போது அவர் அங்கு தத்தளித்துக் கொண்டிருந்தார். அவர் காப்பாற்றப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் திரு. சில்வாவுக்கு அதே அனுபவம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## ஆனைக்கோட்டை ப. நோ. கூ. சங்கம்

### பதவி - வெற்றிடம்

பொது முகாமையாளர்

தகைமைகள்:

(a) S. S. C. ஆங்கிலம் (கணிதம் அல்லது எண் கணிதத்தில் விசேட சித்தி பெற்றிருக்கவேண்டும்.)

(b) கூட்டுறவுப்பாடசாலையில் முகாமையாளர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 25—40 வரைக்கும்.

வேதனம்: ரூபா 150/- (சகலபடிகளும் உட்பட,) (தகைமைக்கேற்றவாறு சம்பளம் கூட்டிவழங்கப்படும்.)

பிணை: காசுப் பிணை- 1500/-, உறுதிப்பிணை- 5000/-.

நற்சாட்சிப் பத்திரங்கள்: அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

விண்ணப்பங்கள் தலைவர், ஆனைக்கோட்டைப் ப. நோ. கூ. சங்கம் என்ற விலாசத்திற்கு 28-8-66 பி. ப. 4 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் செய்வோர் 28-8-66 பி. ப. 4 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்க வேண்டும்.

க. சண்முகநாதன்
தலைவர்
ஆனைக்கோட்டை
ப. நோ. கூ. சங்கம்
ஆனைக்கோட்டை

24-8-66. 936

## அறிவித்தல்

பல்லவராயன் கட்டுக் கிராமசபை பலைப்பாயெற்றிரோட்டமைப்புவேலைக்கு ஒப்பந்தம் அழைக்கப்படுகின்றது. 7-9-66 திகதி பிற்பகல் ஒரு மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 4-9-66 திகதிக்குப் பிந்தாமல் அக்கிராசனருக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டும். விண்ணப்பிக்காதோர் கேள்விப்பத்திரம் பெற உரிமைப்படார்.

1. கேள்விப்பத்திரம் விலை...ரூபா 5-00.
2. கேள்விப்பிணைப்பணம் —விலை ரூபா 50-00.

இன்னும் வேண்டிய விபரங்களை பல்லவராயன்கட்டுக்கிராமசபை விளம்பர இடத்திலும் வடபிரதேசம் உள்ளூராட்சி உதவி அதிபர் அவர்கள் கந்தோரிலும் இவ்வேலையைக்குறித்த விளம்பரத்தில் கண்டறிந்துகொள்ளலாம்.

விசேட குறிப்பு: தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரன் 17-9-66 திகதிக்குள் பிணைப்பணம் கட்டி ஒப்பந்தம் செய்துகொள்ள உடன்பாடுள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.

சி. முகம்மது அப்துல் காதிர், (ஒப்பம்)
அக்கிராசனர்,
பல்லவராயன்கட்டுக்
கிராமசபை,
வேரவில்.

பல்லவராயன்கட்டுக்
கிராமசபை,
வேரவில்,
22-8-66. 943

## கேள்வி விளம்பரம்

### கற்கோவளம் மீன்பிடி இலாகா தெரு வேலை

ஷெ ஒழுங்கைவேலைக்கான கேள்விப் பத்திரங்கள் 3-9-66 சனிக்கிழமை பிற்பகல் 8 மணிவரை புலோலிக் கிராமசபைத் தலைவரால் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் தலைவருக்கு 5-9-66 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 15-00-ம், கேள்விப் பிணைப்பணமாக ரூபா 100-ம் கட்டியதன்பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

மற்றும் விபரங்கள் வட பிரதேச(மேல்) உள்ளூராட்சி உதவி அதிபரின் கந்தோரில் அல்லது எமது கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

த. சிதம்பரப்பிள்ளை,
தலைவர்,
புலோலிக்கிராமசபை.

புலோலிக் கி. ச. [illegible]
பருத்தித்துறை.
26-8-66. 942

## பழைய டிராக்டர்களுக்கு புதியவை

### மாஸி-ஃபேர்கூசன் கமக்காரருக்கு ஒரு 'போனஸ்'

மாஸி-ஃபேர்கூசன் டிராக்டர்களைச் சொந்தமாக வைத்துள்ள, இலங்கையிலுள்ள 101 கமக்காரர்களுக்கு ஓர் எதிர்பாராத 'போனஸ்' கிடைக்கிறது. ஒவ்வொருவரிடமும் பிரெஞ்சு தயாரிப்பான, 30 குதிரைச் சக்தியையுடைய MF 130 டிராக்டர் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் இப்பொழுது அதற்குப் பதிலாக மற்றுமோர் பிரெஞ்சு தயாரிப்பான 45.5 குதிரைச் சக்தியுடைய புத்தம்புதிய MF 135 டிராக்டர் அளிக்கப்படவிருக்கிறது.

கடந்த வருடத்தில், அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காக, இலங்கைச் சந்தையில் முன்னரே விற்பனைக்கிருந்த MF 135 டிராக்டருக்குப் பதிலாக, MF 130 டிராக்டரையே இறக்குமதி செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டதாக இலங்கையில் மாஸி - ஃபேர்கூசன் டிராக்டர்களுக்கு விநியோகஸ்தர்களான கொழும்பு பிரவுண் அண்ட் கொம்பனியின் பேச்சாளர் ஒருவர் விளக்கியுள்ளார்.

எனினும் இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் முன்னேற்றமான விவசாயச்செய்கை முறைகளுக்கிணைய இந்த டிராக்டர்களைப் பரவலாக உபயோகித்துப் பார்த்ததின் விளைவாக, 30 குதிரைச் சக்தியுடைய டிராக்டர் போதியளவு தேவைக்குரிய சக்தியை அளிக்கும் வகையில் திருப்தியளிக்கவில்லையென்ற உண்மைவெளியாகியிருக்கிறது. இன்று இலங்கையில் நிலவும் விவசாயச் செயல் முறைகளுக்கேற்ப திருப்திகரமான சேவை தரக்கூடிய டிராக்டர் குறைந்தது 40 குதிரைச் சக்தியையாவது கொண்டிருக்கவேண்டுமென்பது இப்போது உணரப்பட்டுள்ளது.

''கமக்காரர்களுக்குப் பூரண திருப்தியளிக்கும் தமது உலகமெங்கும் பரவலான கொள்கைக்கமைய, விலைக்குறைப்பு, பாவனை, பிரான்ஸ் தொழிற்சாலையிலிருந்துகொண்டுவந்தபோக்குவரத்துச் செலவு இவற்றுக்கு எவ்வித கட்டணமுமின்றி இந்தத் தாராளமான பரிமாறலை மாஸி-ஃபேர்கூசன் செய்கிறார்கள்'' என்று அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பழைய, புதிய மாடல்களுக்கிடையேயுள்ள சில்லறை விலைகளின் வித்தியாசத்தைமாத்திரம்பிரதிபலிக்கும் ரூ. 2250/- செலவில் புதிய பெரிய டிராக்டர் அளிக்கப்படுகின்றது. 940

# வரி விளம்பரம்

## தேவை

பெண் கொம்பசிட்டர்கள்

கொம்பஸிட்டர்களாகப் பயிற்சிபெற விரும்பும் பெண்கள் தேவை. மனுச்செய்க. ஆங்கில அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்படும். செப்டெம்பர் 15-ம் திகதிக்குமுன் மனுச்செய்க. விளம்பர இல. 900, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 900

மயில்குஞ்சுகள்

மூன்று மாதத்திற்கு மேற்பட்டவையாய் ஐந்து பேடும் ஒன்று சேவலும் வேண்டும். விலையையும் அனுப்பும் செலவையும் தெரிவிக்கவும். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 896

## விற்பனைக்கு

காணியும் வீடும்

3 பரப்புக்காணி புதுவீட்டுடன் எல்லா வசதியுடனும் விற்பனைக்குண்டு, பாலகிருஷ்ணன் 34-ம் நம்பர் குறுக்கு வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் நேரே தொடர்பு கொள்ளவும். 897

காணி

சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கும் தபாற் கந்தோருக்கும் நடுவில், பட்டின சபை அலுவலகத்திற்கு அடுத்து மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் வீதியிலிருக்கும் திருமதி சிவஞானம் இராசையாவுடன்தொடர்பு கொள்ளவும். 894

முந்திரிகைக்கன்றுகள்

கச்சேரிக்கு முன்பாக முந்திரிகைக்கன்றுகள் 26, 27-ம் திகதிகாலை 10 மாலை 5 வரை விற்பனைக்குண்டு. விலை ரூபா 2/50. 895

## கல்வி

வகுப்புகள்:-

மாணவ ஆசிரியர்கள், சுகாதார பயிலுனர், தமிழ்தட்டெழுத்தாளர் ஆகியோருக்குரிய பரீட்சைகளுக்கும்-மற்றும் பல பரீட்சைகளுக்கும் பூரணசேவையளிக்கும்வகுப்புகள் நடைபெறுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 899

கல்வி

கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் G. C. E. (சாதாரணம் உயர்நிலை) பல்கலைக்கழக புகுமுகத்தேர்வு ஆகியாம் பரீட்சைகளுக்குரிய வகுப்புக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. புதிய வகுப்புக்கள் 2-9-66-ல் ஆரம்பமாகும். பாடசாலைக்குச் செல்லும் மாணவ மாணவியர்க்கு மாலையில் வகுப்புக்கள் நடைபெறும். ஆய்வுகூட வசதி (Laboratory) எல்லா வகுப்புக்களுக்கும் உண்டு. பாடங்களிற் குறைவாயிருக்கும் பிள்ளைகளுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படும். விடுதி வசதிகளும் உண்டு. யாழ்ப்பாணக்கல்விநிலையம், 304/3, வைத்தியசாலைவீதி, யாழ்ப்பாணம். 898

தபால்மூலம்!

மாணவ ஆசிரியர் பரீட்சைக்கு சகல பாடங்களும் தபால்மூலம் (மாதிரிவினாப் பரீட்சை) போதிக்கப்படுகின்றது. G.A.Q. 3-9-66ல் ஆரம்பம். விபரங்களுக்கு 5 சத [illegible] ரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 891

## திருமண அழைப்பு

28-8-66 ஞாயிறு முற்பகல் 9 மணி அளவில் அல்வாயூர் இரத்தினம் இரத்தினராஜா B.Sc. (தெனியாயா மத்திய மகாவித்தியாலயம் ஆசிரியர்) அவர்கட்கும் எமது புதல்வி பாரதிக்கும் திருமணம் நடைபெறும். அன்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்று வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றேன். மு. செல்லையா, (கவிஞர்) ''பாரதிபவனம், அல்வாய். 893

## நாடகக்கலை வளர்ச்சியில் இளைஞர் பங்கு

சுழிபுரம், வியாழன்

நாடகக்கலை வளர்ச்சியில் இளைஞர் பங்கு மிகவும் முக்கியமாகும். இன்று நாடகக்கலை பல்வகையிலும் வளர்ச்சி அடைந்துள்ளது. இக்கலையை போற்றிப் பாதுகாப்பது ஒவ்வோர் நாடக மன்றங்களின் கடமையாகும் என்று வட்டுக்கோட்டை கலைவாணி நாடக மன்றத்தாரின் 5-ம் ஆண்டு நிறைவு விழாவில் பேசிய நியாயவாதி எம். கே சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

விழாவுக்கு நா. சிவலோகநாதன் தலைமை வகித்தார். திரு. எம். கே. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் வட்டுக்கோட்டை கிராமம் யாழ்ப்பாணத்துக்கு சிகரம் வைத்ததுபோல் நாடகக் கலையை போற்றிப் பாதுகாத்து வருகின்றது. பழைய நாட்டுக்கூத்து அழியாது மரபோடுபாதுகாக்கப் படுகின்றது. இவற்றைப் போல் எமது வாழ்வு சிறக்க பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தும்படியும் வேண்டுகின்றேன். மற்றும் பலர் பேசினர். மன்ற உறுப்பினர்களால் 'முடி துறந்த அண்ணல்' என்னும் நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

## பழைய மாணவர் சங்கம் ஆரம்பம்

கொடிகாமம், புதன்

கச்சாய் அரசினர் பாடசாலை பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் திரு. கு. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: கு பூபாலசிங்கம். உபதலைவர்: செல்வி. வை. பூபதி. காரியதரிசி: க. மார்க்கண்டு. உபகாரியதரிசி: செல்வி. ந. சிவபாக்கியம். தனாதிகாரி: திரு. க. ஆறுமுகம்.

நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பாடசாலைக் கட்டிட நிதிக்காக ஓர் நாடகம் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவுடன் சேர் பொன். இராமநாதனின் சுயசரிதத்தை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு மு. வைத்தியலிங்கம் எழுதி வருகிறார். இந்நூல் முடிவடையும் கட்டத்தில் இருக்கிறது இந்தநூலில் சேர்ப்பதற்குசேர் இராமநாதன் சம்பந்தமானவேறு ஏதாவது தகவல்களை தந்துதவும்படிவிவேகானந்த சபையினர் பொது மக்களிடமிருந்து கேட்டுக் கொள்கின்றனர்.

இந்த நூலாசிரியர் திரு. மு. வைத்தியலிங்கம் 'சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வாழ்க்கையும், சேவையும்' என்னும் பொருள்பற்றி நாளை மாலை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சொற்பொழிவாற்றுவார். சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் தலைமை வகிப்பார்.

## திருமண அழைப்பு

மணமகன்: சு. சண்முகநாதன்
(ஆசிரியர் வேலணை மத்திய கல்லூரி)

மணமகள்: த. அகிலத்திருநாயகி

### மங்கல நாண்பூட்டல்

ஞாயிற்றுக்கிழமை 28-8-66

முற்பகல்: 10-மணி முதல் 10-30 மணிவரை
இடம்: கந்தர்மடம் பழம் ரோட்டு பிள்ளையார் கோவில்
விருந்துபசாரவிழா: 28-8-66 மாலை 5 மணிக்கு மணமகனில்லத்தில்

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

| மணமகளில்லம்: | மணமகனில்லம்: |
| --- | --- |
| ஆ. தம்பையாவும் பாரியாரும் | சு. சுப்பிரமணியமும் பாரியாரும் |
| மண்டைதீவு - 6. | 97, பலாலி வீதி, கந்தர்மடம். யாழ்ப்பாணம். |

## S. M. இராமக்கிளி!

அவர்களின்

அதிபயங்கர சைக்கிள் சேர்க்கஸ்ஸாம

அவரது கோஷ்டியினரின் வேறு பல

சேர்க்கஸ் விளையாட்டுகளும்

### யாழ். கோட்டை மைதானத்தில்

(பிரதம தபாற்கந்தோருக்கு முன்னால்)

### 21-8-66 முதல்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தினசரி மாலை 6 மணி — 10 மணி வரை நடைபெறும்.

பிரவேசக்கட்டணம்:

கதிரை ரூ. 1/-, தரை 50 சதம், சிறுவர் 25 சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியட்னும் சண்டை**

# ஆசியநாடுகள் மகாநாடு யோசனைக்கு அமெரிக்கா ஆதரவு

## 'மகிழ்ச்சியுடன் வரவேற்போம்' என்கிருர் ஜோன்ஸன்

வாஷிங்டன், ஆக. 25

வியட்னும் தகராறில் சமாதானத்தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் வகையில் அகில ஆசிய நாடுகளையும் கொண்ட ஒரு மகாநாடு கூட்டப்படவேண்டும் என்ற யோசனையை அமெரிக்கா வரவேற்றிருக்கின்றது.

ஆசியநாடுகளின் மகாநாடொன்றை நடத்தவேண்டும் என்றும் அதன்மூலம் வியட்னும்சண்டைக்குமுடிவு காணவேண்டும் என்றும் தாய்லாந்து ஒரு யோசனை கூறியிருந்தது. இந்த யோசனையை மலேசியாவும் பிலிப்பைனும் ஆதரித்திருந்தன. ஆனால் வடவியட்னும் இந்த யோசனையை நிராகரித்து விட்டது.

இப்போது அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் இந்த யோசனையை ஆக்கரீதியானதென்றும் அப்படி ஒரு மகாநாடு நடைபெறுவதால் சிறப்பான முடிவு ஒன்று மேற்கொள்ளப்படுவதையும் அமெரிக்கா மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்றும் கருத்துப்பட இங்கு நிருபர்களிடம் பேசினுர்.

ஆசிய நாடுகள்கூடி வியட்னும் போருக்கு முடிவு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்துவதை ஜனாதிபதி ஜோன்சன் வரவேற்றிருப்பதுடன் அப்படியானமகாநாடு நடைபெறுவதற்கு அமெரிக்கா எந்த விதத்திலும் ஆரம்ப முயற்சிகளில் ஈடுபடாதென்றும் அப்படிச்செய்தால்வீண் தப்பபிப்பிராயங்களுக்கு இடம் ஏற்படும் என்றும் கூறினுர்.

# மிகிர் சென்னின் மூன்ருவது வெற்றி!

## ஜிப்ரால்டர் ஜலசந்தியையும் நீந்திக் கடந்தார்

ஜிப்ரால்டர். ஆக. 25

இந்திய நீச்சல்வீரர் மிகிர் சென் ஜிப்ரால்டர் ஜலசந்தியை வெற்றிகரமாக நீந்திக் கடந்துள்ளார்.

முப்பத்தாறு வயதினரான நீச்சல் வீரர் மிகிர்சென் நேற்று ஜிப்ரால்டர் ஜலசந்தியை நீந்த ஆரம்பித்தார். 8 மணி ஒரு நிமிட நேரத்தில் அவர் ஜிப்ரால்டர் ஜலசந்தியை நீந்திக்கடந்தார். முதலில் மொராக்கோ கரையிலிருந்து நீந்துவதற்கு உத்தேசித்திருந்த திரு. மிகிர் சென் உள்ளூர் நீச்சல் நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் ஸ்பெயின் கரையிலிருந்து நீந்தினுர். இந்த ஜலசந்தியில் நீந்தும் பலரும் சுருமீன்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தும் ஆயுதங்களையோ, உடைகளையோ திரு. மிகிர் சென் பயன்படுத்தவில்லை. ஆனுல் நீச்சல் முடிந்து கரைசேர்ந்ததும் "இந்த ஜலப்பிராந்தியம் பயங்கரமானதென்றும், ராட்சத சுருமீன்கள் காணப்படுவதாகவும் அவர் கூறினுர். நீச்சலின்போது மிகிர் சென் பயங்கர அலைகளுடனும் போராடவேண்டியிருந்தது.

திரு. மிகிர்சென் ஏற்கனவே ஆங்கிலக்கால்வாயையும், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள பாக்கு நீரிணையையும் நீந்திக் கடந்துள்ளார்.

ஜிப்ரால்டர் ஜலசந்தியை நீந்திக் கடந்துள்ள முதலாவது ஆசியாக்காரர் இவர்தான். இந்த ஜலப்பிரதேசம் ஆபிரிக்கா கண்டத்துக்கும் ஐரோப்பா கண்டத்துக்குமிடையிலிருக்கின்றது.

# அஸ்ஸாம் பிரதேசத்தில் வெள்ளச்சேதம் அதிகரிப்பு

## பிரமபுத்திரா நதியின் கோபாவேசம் தணியவில்லை

புதுடில்லி, ஆக. 25

அஸ்ஸாம் பிரதேசத்தில் வெள்ளம் மேலும் பயங்கரமாக அதிகரித்துள்ளது.

பிரமபுத்திராநதி அபாய நிலைக்கு மேல் 4 அங்குலம் உயர்ந்து பாய்வதாக அறிக்கைகள் கூறுகின்றன. ஜோர்காட் பகுதியில் பல இடங்கள் சேதமாகியுள்ளன. அணைக்கட்டுகளையும் தகர்த்துள்ளன.

ஜிப்ருகாட்பகுதியில் ரயில் பாதைகள் அடித்துச்செல்லப்பட்டுள்ளன.

மேற்கு வங்காளத்தில் மண்சரிவுகள் ஏற்பட்டதில் ரயில்பாதைகள் தகர்ந்துள்ளன. டார்ஜிலிங் பகுதியில் பீகாரில் பூர்னிகா ஜில்லாவில் பெருத்த மழைபெய்த வண்ணம் இருக்கின்றது.

சமீபகாலத்தில் உத்தர பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பலத்த மழையின் காரணமாக ஏழு நதிகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. இப்பகுதியில் இதுவரை 21 பேர் மரணமாகியுள்ளார்கள். 6 ஆயிரம் வீடுகள் நாசமாகியுள்ளன. 9[illegible] மங்கள் பெருமளவில் [illegible]கப்பட்டுள்ளன.

## கிழக்காசிய நாடுகளின் முன்மாதிரி

டோக்கியோ, ஆக. 25

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக, கிழக்காசியாவிலுள்ள நாடுகள் தமது ஜனப்பெருக்கப் பிரச்னைகளை உற்சாகமான வழிமுறைகளில் தீர்க்க முற்பட்டுவருகின்றன என்று டோக்கியோவில் நடைபெறும் 11-வது பசுபிக் விஞ்ஞான காங்கிரசில் அறிவிக்கப்பட்டது.

"இப்பகுதியிலுள்ள பல நாடுகள் கட்டுப்பாடற்ற ஜனப்பெருக்கச் சங்கிலித் தொடர்பைத் துண்டிப்பதில் தலைமைதாங்கிவருகின்றன" என்று டாக்டர் ரிச்சார்ட் அண்டேர்சன் காங்கிரஸ் கூட்டத்தில் கூறினுர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

'கொரியா, தய்வான், ஹொங்கொங் ஆகிய இடங்களில் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களின்முன்னேற்றம், மலேசிய, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள், வேறு பல நாடுகளில் இத்திட்டங்கள் பெற்றுத்தந்துள்ள பலாபலன்கள், நவசீனுவிலிருந்து வரும் தகவல்கள் எல்லாமே, பசிபிக் பகுதியில் உள்ள இந்தநாடுகள் தமது ஜனப்பெருக்கப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணத்தொடங்கியுள்ளன என்ற நம்பிக்கையை வலுப்படுத்துகின்றன.'

"இந்தநாடுகள் பின்பற்றும் வழிமுறைகள் பொதுவாக அபிவிருத்தியடைந்துவரும் பிறநாடுகள் பின்பற்றக்கூடியனவாகஅமைந்துள்ளன" என்று டாக்டர் அண்டேர்சன் மேலும் தெரிவித்தார். பி.டி.ஸி.

## இந்தோனேஷியாவில் அடித்தளக் கொந்தளிப்பு

நியுயோர்க், ஆகஸ்ட் 25

இந்தோனேஷியாவில் கடந்த இலையுதிர் காலத்தில் தோல்வியடைந்த கம்யூனிஸ்ட் ராணுவச் சதியொன்றைத்தொடர்ந்து அங்கு நடைபெற்ற இரத்தக் களரியில் 150.000க்கும் 4000 000க்குமிடையே கம்யூனிஸ்டுகள் கொலை செய்யப்பட்டதாக நியுயோர்க் 'டைம்ஸ்' பத்திரிகையின் தென்கிழக்காசியா நிருபர் தெரிவித்துள்ளார்.

'விஷயமறிந்த வட்டாரங்கள் கொலை செய்யப்பட்ட தொகை 50 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாமென ஒப்புக்கொள்கின்றன' என்று அந்த நிருபர் மேலும் தெரிவித்துள்ளார்.

அந்நிருபர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,- 'கொலைகள் சில இடங்களில் இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றன. வஞ்சம் தீர்க்கும் வகையிலும், இரத்தப்பலி வாங்கும் அவாவிலும் எண்ணற்ற கம்யூனிஸ்டுகள் கொலைசெய்யப்பட்டுள்ளது, இந்தோனேஷியர்களிடையே அடித்தளத்தில் கொந்தளிப்புணர்ச்சி [illegible]

(பி. டி, ஸி.)

# ரஷ்யா அனுப்பியுள்ள புதியசெயற்கைகிரகம்

மாஸ்கோ, ஆக. 25

சந்திரமண்டலத்தை நோக்கி சோவியத் யூனியனும் ஒரு செயற்கைக் கிரகத்தை அனுப்பியிருக்கின்றது.

சந்திரமண்டலத்தில் செயற்கை கிரகங்களின்நிலை பற்றியும் வேறு விஞ்ஞான நுணுக்கங்கள் பற்றியும் இந்தக் கிரகம் தகவல்களை அனுப்பும் என்று தெரிகின்றது.

அமெரிக்கா சந்திரமண்டலத்துக்கு அனுப்பியுள்ள கிரகத்தின் வழியிலேயே ரஷ்யக் கிரகமும் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. லூனு-11 என்று இந்தக்கிரகத்துக்கு பெயர்சூட்டப்பட்டுள்ளது.

### அமெரிக்க கிரகம்

இதற்கிடையில், ஏற்கனவே அமெரிக்கா சந்திர மண்டலத்துக்கு அனுப்பியுள்ள கிரகம் சந்திரனைச்சுற்றி வருவதுடன், பல புதிய படங்களையும் பூமிக்கு அனுப்பிவருகின்றது. பூமியின் வடிவத்தை விண்வெளியில் படம்பிடிக்கப்பட்ட முதல் படங்களையும் இந்தக் கிரகம் பூமிக்கு அனுப்பியுள்ளது.

# தொடர்ந்து பதவி வகிக்க ஊதாண்ட் விரும்பவில்லை

## போதிய ஒத்துழைப்பு இல்லாமை காரணம்?

நியுயோர்க், ஆக. 25

ஐ நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் தமது பதவிக்காலம் முடிந்ததும் தொடர்ந்தும்அடுத்தமூன்று ஆண்டுகளுக்கு பதவியிலிருக்க முயற்சி செய்ய மாட்டார் என்று இங்கு செய்திகள் உலாவுகின்றன.

செப்டம்பர் 1-ம் திகதி யுதாண்ட் தொடர்ந்து பதவியிலிருப்பாரா இல்லையா என்பது பற்றி செய்தி வெளியாகும்.

அவர் லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுமார் ஒருவார காலம் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத்திரும்பியதும் தமதுராஜினுமாவை மாமூல் முறைப்படி சமர்ப்பிப்பார். ஆனுல்அவரைத்தொடர்ந்து பதவியில் இருக்கும்படி பல நாடுகள் கோரியுள்ளன, அவைகளில் அமெரிக்காவும் ஒன்று.

திரு. யுதாண்ட் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையில் கடந்தகாலத்தில் தாம்மேற்கொண்ட சமாதான முயற்சிகளில் குறிப்பாக வியட்னும் விஷயத்தில் போதிய ஒத்துழைப்புஇல்லாமல்போனதையும், ஐ நா.வின்நிதிநிலைமை பற்றியும் குறிப்பிடுவார் என்று நம்பப்படுகின்றது. மேலும் கடந்த காலங்களில் போலல்லாமல் எதிர்காலத்தில் சிறப்பான ஒத்துழைப்பு தரப்படுமென்றுஉறுதியளிக்கப்பட்டால் அவர் தொடர்ந்து பதவியில் இருக்க சம்மதிக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

# மாஸேதுங்கு எதிர்ப்பாளர்வீடுகளில் சீன இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

## ஜன்னல்களையும் சாமான்களையும் தகர்த்து எறிந்தனர்

ஹொங்கொங், ஆக. 25

புதுமை விரும்பிகள்என்று தம்மை அழைத்துக் கொள்ளும் சீன இளைஞர்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று பீகிங்கில் வீடுகளில் நுழைந்து அட்டகாசம் புரிந்தனர். மாசேதுங் எதிர்ப்பாளர்கள் என்று கருதப்படும் வீடுகளுக்குள் நுழைந்து அவர்கள் ஜன்னல்களை உடைத்தும், சாமான்களை நொறுக்கியும்ஆர்ப்பாட்டம் புரிந்தனர்.

வீடுகளில் இருந்த பழைய சாமான்களையும் வெளிநாட்டுச் சாமான்களையும் அவர்கள் எடுத்து எறிந்தனர். வீடுகளில் இருந்த புத்தர் சிலைகளையும் பழையபத்தாம் பசலிக்கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகக்கூறி அகற்றிவிட்டார்கள்.

## மேற்கு ஜெர்மனி ராணுவக் குழப்பம்

பொன். ஆக. 25

மேற்கு ஜெர்மனியில் ராணுவப் பிரிவுகளிடையே தொழிற் சங்க நடவடிக்கைகளை அனுமதிப்பது என்ற பாதுகாப்பு மந்திரி வொன் ஹாசலின் முடிவைஎதிர்த்து முக்கிய ராணுவ, கடற்படை, விமானசேவைகளின் தலைவர்கள் தமது ராஜினுமாக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஏற்கனவே தனது அரசியற் தலைமைக்கும், பொருளாதாரக் கொள்கைகளுக்கும் தனது சொந்தக் கட்சியிலிருந்தே எதிர்ப்பை நோக்கிவரும் மேற்கு ஜெர்மன் பிரதமர் லட்விக் ஏர்ஹார்ட்டுக்கு இது மேலும் ஒரு தலையிடியாக வந்துள்ளது.

எதிர்க்கட்சியிலுள்ள சோஷலிச ஜனநாயக வாதிகள் பாதுகாப்பு மந்திரி வொன் ஹாசலின் ராஜினுமாவைக் கோருகின்றனர்.

(பி. டி. ஸி.)

## கான்பெராவில் ஆசிய கண்காட்சி

கான்பெரா, ஆக. 25

மத்திய கான்பெராவில் 12 ஆசியத் தூதராலயங்கள் செப்டம்பர் 10-ந் திகதியன்று தத்தம் நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இல்லங்களை நிறுவுவர்.

பசிப்பிணியிலிருந்தும் விடுதலை இயக்கம் நடாத்தும் கண்காட்சியொன்றில் பங்குபற்று முகமாகவே இத்தூதராலயங்கள் இவ்வில்லங்களை நிறுவவிருக்கின்றன.

இக்கண்காட்சியில் இந்தியா, பாகிஸ்தான், பர்மா, கம்போடியா, இலங்கை, தேசிய சீனு, தென்கொரியா லாவோஸ், மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, தென்வியட்னும் ஆகிய நாடுகளின் தூதுவராலயங்கள் பங்குபற்றுகின்றன.

நிதி வசூலிக்கும் இயக்கமாக இது அமையாவிடினும் செலவுகளைத் தீர்க்கும்வகையில் சிறிய கட்டணம் ஒன்று அறவிடப்படும். (பி. டி. ஸி.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முணிவாக்கு

இறையோடு ஐக்கியப் படுதல் என்பது மனித வர்க்கத்தின் ஐக்கியத்தை அறிவதாகும். நம்பிக்கையின்மை, வெறுப்பு, பிரிவினை, போர் என்பவைகளால் ஏற்பட்டிருக்கும் இன்றைய உலக கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் வழி இதுவே.

—சுவாமி இராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49 JAFFNA.

Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆவணி 10 உ. (26-8-66)


## ஐ.நா., உலக வங்கி உதவி

இலங்கைக்கு மீண்டும் உதவி அளிப்பது பற்றி உலக வங்கி பரிசிலனை செய்துவருவதாகவும் இலங்கையின் அபிவிருத்திக்கு மேலும் உதவியளிப்பது பற்றி இலங்கை அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த ஐ. நா. உயர் அதிகாரி ஒருவர் விரைவில் இலங்கை வரவிருப்பதாகவும் இரு நல்ல செய்திகள் கிடைத்துள்ளன.

இலங்கையின் மீன்பிடித் தொழிலை விருத்திசெய்வதற்கும் கைத்தொழில் அபிவிருத்திக்கும் உலகவங்கி அளிக்கவிருக்கும் உதவி பயன்படுத்தப்படவிருப்பதாகவும் ஐ. நா. அளிக்கவிருக்கும் உதவி விவசாயம், கைத்தொழில் விருத்திக்குப் பயன்படுத்தப்படுவதுடன் மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டத்துக்கு அதில் முக்கியத்துவமளிக்கப்படவிருப்பதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு விரைவில் வரவிருக்கும் ஐ. நா. உயர்தர அதிகாரி சேர் ரொபர்ட் ஜாக்ஸன் பிரதமருடனும், நிதி மந்திரி, கைத்தொழில், காணி, சுகாதார மந்திரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் திட்டம் பொருளாதாரம் ஆகியவற்றுக்கான அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுடனும் ஆலோசனை நடத்தவிருக்கிறார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு ஐ. நா வின் உதவியும் உலக வங்கியின் உதவியும் விரைவில் கிடைக்கவிருக்கிறது. இலங்கையின் விவசாயம், கைத்தொழில்களை விருத்தி செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த உதவிகள் பயன்படுத்தப்படவிருக்கின்றன. இது மகிழ்ச்சியளிக்கும் செய்தி.

இந்த உதவிகள் என்ன முறையில் கிடைக்கவிருக்கின்றன; இவைகள் எப்படி பயன்படுத்தப்படுமென்பது பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியது அவசியம்.

இலங்கைக்கு இப்பொழுதுதான் வெளிநாட்டு உதவியோ, ஐ நா. உதவியோ கிடைக்கவில்லை. இதற்கு முன்னரும் இந்த உதவிகள் கிடைத்திருக்கின்றன. ஆனால் இந்த உதவிகளை ஒருமுகப்படுத்தாததாலும் சரியானதிட்டமிடப்படாததாலும் அவை நாட்டுக்குப் பயன் தரவில்லை. விவசாயத்தை விருத்தி செய்வதற்கும் அதற்கு முக்கியமான நீர்ப்பாசனத்துக்கு தீவிர நடவடிக்கை எடுக்கவும் காணி, நீர்ப்பாசன அமைச்சு முடிவுசெய்துள்ளது. இதன் பயனாக ஐந்து வருடத் திட்டமொன்றையும் அது தயாரித்துள்ளது. கைத்தொழில், மீன்பிடி அபிவிருத்திக்கும் இவ்விதத் திட்டங்கள் வகுத்து அவற்றை அமுல் நடத்த வேண்டும். பத்துவருடத் திட்டங்களும் ஆறு வருடத் திட்டங்களும் முன்னர் இங்கு வகுக்கப்பட்டதாயினும் அவை சரியான முறையில் திட்டமிடப்படவுமில்லை; அமுல் நடத்தப்படவுமில்லை. வெளிநாடுகள் அளித்த உதவிகள் வீணாக்கப்பட்டன. இதே நிலை இனியும் ஏற்படக் கூடாது. அயல் நாடான இந்தியாவில் மூன்று ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேறி விட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மந்திரிசபையின் அங்கீகாரத்தையும் பெற்று விட்டது. ஐந்தாண்டுத் திட்டங்கள் அனைத்தும் இந்தியாவில் வெற்றி பெற்று விட்டதாகக் கூற முடியாது. எனினும் இந்தியா பல துறைகளிலும் தன்னிறைவு பெற்றிருக்கிறது. வெளியாரின் உதவியை எதிர்பார்க்காது, தானே தன்னைச் சமாளித்துக் கொள்ளக்கூடிய நிலையை அது அடைந்துள்ளது. இன்று அங்கு உணவுக் கஷ்டமும் மற்றும்வாழ்க்கைச் செலவுக் கஷ்டமும் அதிகரித்திருக்கலாம். இதற்கு வெளியார் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட செலவுகளும் ஒரு காரணமாகும். எனினும் அபிவிருத்தித் திட்டங்கள் அங்கு பலநன்மைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இன்று கஷ்டம் அனுபவிக்க நேரிடினும் எதிர்காலத்தில் அவற்றின் முழுப்பயனையும் இந்திய மக்கள் அனுபவிப்பார்கள்

ஐ நா. உதவியும் உலக வங்கி உதவியும் கிடைக்கவிருக்கும் இச்சமயத்தில் நாமும் திட்டங்கள் வகுத்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும். திட்டமிடுகையில் நாட்டின் நலனையும் நாட்டின் மூலவளங்களையும் கருத்தில் கொள்ள வேண்டுமாகையால் அந்தத்துறையின் நிபுணர்களைக் கொண்ட குழுதான் அப்பணியைச் செய்யவேண்டும். அதில் அரசியல் வாதிகளுக்கு இடமிருக்கக்கூடாது. ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி அமுல்நடத்தி நன்கு அனுபவம் பெற்றுள்ள இந்திய நிபுணர்களின் உதவியையும் இலங்கைபெறுவது, திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு உதவியளிக்கலாம்,

---

### கலைமன்ற விழா

உடுப்பிட்டி, வியாழன்

வடமராட்சிப் பிரதேச கலைமன்ற நடன, நாடக, இசை விழா அடுத்த மாதம் 4, 5, 6-ந் திகதிகளில் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்நிலை பாடசாலை மண்டபத்தில் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. அ. க, விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

## தொண்டமானாறு உற்சவகால இசையரங்கு

யாழ்ப்பாணம், வியா.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி உற்சவகாலத்தையொட்டி அளவையூர் ஸ்ரீ எஸ். விஞசித்தம்பியினால் கதாப்பிரசங்கங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 26, 27, 28-ம் திகதிகளில் மாலை 6 மணிக்கு முறையேகதிர்காமக்கந்தன், தேவநாயகனும் தெய்வானையும், வள்ளலும் வள்ளியும் ஆகிய தலைப்புகளில் கதாப்பிரசங்கங்கள் இடம்பெறும்.

9-ம் திருவிழா, 11-ம் திருவிழா, 12-ம் திருவிழாக்களில் முறையே நா. இந்திராதேவி, ந. பிராணேஸ்வரி குழுவினர், திருமதி பூமணி இராசரத்தினம் குழுவினர், சங்கீதபூஷணம் எஸ். தங்கலட்சுமி குழுவினர் ஆகியவர்களின் சங்கீதக கச்சேரிகள் இடம்பெறும்.

---

## இளைஞர்மன்ற ஆண்டுவிழா

ஊர்காவற்றுறை, வியா.

இம்மாதம் 29ம் திகதி மாலை 6-30 மணியளவில் ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் ஆலய மைதானத்தில் நடைபெறும் இளைஞர் மன்றத்தின் 2-வது ஆண்டுவிழாவில் பிரதமஅதிதியாக டாக்டர் ஓ. எல். ஏபிரகாம் கலந்து கொள்வார். மேற்படி விழாவையொட்டி நாடகம், நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

---

## அமெரிக்க மிஷன் 150 ஆண்டு நிறைவு விழா

சுழிபுரம், வியாழன்

அமெரிக்க மிஷன் 150-வது ஆண்டு நிறைவு விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் வட்டுக்கோட்டையில் நடைபெறும். இம்மாதம் 28-ம் திகதி நடைபெறும் நிகழ்ச்சியில் அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்த இருக்கின்றார். இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர், மற்றும் கிறிஸ்தவ பிரமுகர்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

---

## பயிர்ச் செய்கைக் குழுக் கூட்டம்

காரைநகர், வெள்ளி

காரைநகர் மேற்கு பயிர்ச்செய்கைக் கூட்டத்தில் பயிர்ச் செய்கைக் குழுவின் புதுவருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பயிர்ச்செய்கைக் குழுவின் பொதுக் கூட்டத்தை செப்டம்பர் 1-ந் திகதி மாலை கூட்டுவதெனவும், 1965-ம் ஆண்டுக்குரிய கம வரியை 1966 புரட்டாசி மாதத்திற்குள் கட்டவேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர்: திரு. அ. கனகசபை. காரியதரிசி: திரு. ஆ. குமரேசு. தனாதிகாரி: திரு. க. வைத்திலிங்கம்.

---

## கிராம சபை உபதலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் கிராமசபையின் உபதலைவராக திரு. சிவக்கொழுந்து கனகரத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## யாழ். பிரதேச மன்ற கலைவிழா

### நாளைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பிரதேச கலை மன்றத்தின் கலைவிழா இன்று ஆரம்பமாகியுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகளை நேற்றைய 'ஈழநாட்'டில் வெளியிட்டிருந்தோம் நாளைய நிகழ்ச்சிகளைக் கீழே தருகிறோம்.

நாளை காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை, வழக்கம்போல் கலைக்காட்சி யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறுகிறது.

திறந்த வெளியரங்கில் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் கலை நிகழ்ச்சிகளில் முதலாவதாக ஸ்ரீபஞ்சாபிகேசன் குழுவினரின் நாதஸ்வர இசை இடம்பெறுகிறது. இது 7 மணிவரை நடைபெறும்.

7 மணி தொடக்கம் 7-15 மணிவரை, சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் கோஷ்டிகானமும், 7-15 தொடக்கம் 7-30 வரை அண்ணாமலை இசைக்கலை மன்றத்தின் கோஷ்டிகானமும் இடம்பெறுகின்றன. 7-30 தொடக்கம் 8-30 வரை திரு கே. கணபதிப்பிள்ளை பாட்டுக்கச்சேரி விருந்தளிக்கிறார்.

இதைத்தொடர்ந்து 8-30 தொடக்கம் 9-15 வரை செல்வி திரு. குமாரசாமி அளிக்கும் 'பாமா விஜயம்' நாட்டிய நாடகம் நடைபெறும். 9-15 தொடக்கம் 10 மணிவரை திருநெல்வேலி பாரதி கலாமன்றத்து மாணவிகளின் நடன நிகழ்ச்சி இடம்பெறும்.

கடைசியாக, 10 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை திருநெல்வேலி கலாஜோதி நாடக மன்றத்தாரின் 'இலட்சிய வீரன்' நாடகத்தைக்கண்டு களிக்கலாம்.

---

## பட்டதாரிகள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

விரைவில் நடைபெறவிருக்கும் பட்டதாரிகளின் ஆசிரியர் பதவிகளுக்கான புதிய நியமனங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் நீதியான முறையில் தெரிவு செய்யப்படவில்லையென்றும் இது சம்பந்தமாக தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் பிரதம மந்திரிக்கும், ராஜாங்க மந்திரிக்கும், உள்ளூராட்சி மந்திரிக்கும் ஆட்சேபத் தந்திகளை அனுப்பியுள்ளது.

ஒழுங்கற்ற முறையிலும், வேறுபட்ட தராதரங்களின் படியும், சித்திபெய்திய வருடங்களிலும் பாரபட்சம் காட்டி நேர்மையற்ற முறையில் ஆசிரியர்கள் தெரிவு நடைபெற்றிருப்பதாக மேற்படி சங்கம் அனுப்பப்பட்ட தனது தந்திகளில் குறிப்பிட்டுள்ளது. இதுசம்பந்தமாக பிரதமரைச் சந்திக்க யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு பட்டதாரிகள் தூதுகோஷ்டி கொழும்பு சென்றுள்ளது.

---

## ராஜாங்க மந்திரி

மாவிட்டபுரம், வியா.

வடமாகாணத்தில் இரு தினங்கள் தங்கியிருந்த ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்றுக் காலை விமான மூலம் கொழும்பு திரும்பினார்.

ராஜாங்க அமைச்சர், உதவி அமைச்சர்களுடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம், திருச்செல்வம், தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரும்கொழும்புக்கு அதே விமானத்தில் பிரயாணமாகினர்.

## நாடும் நடப்பும்

காலையில் எழுந்ததும்யார் முகத்தில் விழித்தால் நல்லது? குழந்தையின்முகத்தில் விழிக்கவேண்டும் இல்லையேல் மலரில் விழிக்க வேண்டும். அப்படி விழித்தால் அன்று முழுவதும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருக்கும்.

ஆனால் இப்பொழுதோ ''பத்துபேர் சாவு, தீப்பிடித்து 100 வீடுகள் கொலை!, ஆற்றில் பெண்ணின் பிரேதம்!'' என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தியாகப் போட்டுவரும் பத்திரிகைகளில்தான் விழிக்கவேண்டியிருக்கிறது. இதுதான் செய்தி! இதுதான செய்திப்பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் செய்திகள். இவை தவிர வேறுசெய்திகள் இல்லையா?

நல்லசெய்திகள், மனதுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியசெய்திகளை தலைப்பாக வெளியிட்டால் என்ன?

இப்படிச் சொன்னவர் யார் தெரியுமா? அறிஞர் கி. வா. ஜகந்நாதன்தான். 'ஈழநாடு' காரியாலயத்துக்கு சில தினங்களுக்குமுன் விஜயம் செய்த அவர், 'செய்திப்பத்திரிகை பற்றி எனக்கு ஒன்றும் அதிகமாகத் தெரியாது. ஆனால் 'ஒருவாசகன்' என்ற முறையில் ''கொலை, கொள்ளை போன்ற அவச்செய்திகளை கொட்டைஎழுத்தில் வெளியிட்டு மக்கள் மனதைக் கெடுப்பது நல்லதல்ல வென்பதே தனது கருத்து என்றார்.

தாதிகளாகப் பயிற்சி பெறுவதற்கு இனி தொகுதிவாரியாகத் தெரிவு செய்யப் போகிறார்களாம். எம். பி.க்களின் சிபார்சுடன் தான் இத்தெரிவு நடைபெறுமாம்.

பஸ் கண்டக்டர் தெரிவும் தொகுதிவாரியாக நடைபெறுகிறதாம். ஒவ்வொரு உத்தியோகத்துக்கும் தொகுதிவாரியாகத் தெரிவு செய்யப்படுவதானல் திறமையும் தகுதியும் உள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவார்களா? எம். பி.க்களாக வருவதற்கு தங்களுக்கு ஆதரவளித்தவர்களையும் ஆதரவாளர்களின் உறவினர்களையும் தெரிவு செய்வார்களா?

நமது பிரதிநிதிகளுக்கு வேலைகள் கொஞ்சமல்ல. ஆசிரியர் நியமனம் இடமாற்றம் இன்னும் நமது எம். பி.க்களைவிட்டு முற்றாக நீங்கவில்லை. இத்துடன் உத்தியோகத்துக்குத் தெரிவு செய்யும் பொறுப்பையும் அவர்களிடம் விடுவதா?

ஃ ஃ ஃ

எம். பி.க்கள் செனட்டர்கள் என்றாலே தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் உத்தியோகம் பெற்றுக்கொடுக்கும் ''வேலை தேடிக் கொடுக்கும் கந்தோர்'' என்று சிலர் நினைக்கிறார்கள்.

தங்கள் இடமாற்றத்தைத் தடுத்து நிறுத்தும் ஆபத்பாந்தவர்களாகக் கருதும் ஆசிரியர்களும் உள்ளனர்.

ஃ ஃ ஃ

பொதுமக்களை மட்டும் இதில் குற்றம் சொல்ல முடியாது. எம். பி. க்களும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இடமாற்றத்திலும் நியமனத்திலும் எம். பி.க்கள் இடம் கொடுத்ததால்தான் பொதுமக்கள், எம். பி. க்களிடம் இதை எதிர்பார்க்கிறார்கள்.

ஃ ஃ ஃ

உத்தியோகத்துக்குத் தெரிவு செய்யும் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்கவேண்டாமென்று எம். பி.க்கள் சொல்லவேண்டும். சொல்வார்களா? அடுத்த தேர்தலுக்குக் கிடைக்கவிருக்கும் வாய்ப்பை எப்படி விடுவார்கள்!

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேந்தாங்குளத்தில்

## தற்கொலைபுரிய முயன்ற பெண்

### நீதிபதிமுன் ஆஜர்

மாவிட்டபுரம், வியா. சேந்தாங்குளத்தில் தற்கொலைசெய்துகொள்ள முயன்ற 35 வயதுள்ள ஒரு பெண் மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு இரட்சணிய சேனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த பிலிப்புப்பிள்ளை பெண் மரியம்மா என்ற இப்பெண் நேற்றுமாலை சேந்தாங்குளத்தில் தற்கொலை செய்துகொள்ள முயன்றபொழுது மார்டின் சூசைப்பிள்ளை என்பவர் அவரைக்காப்பாற்றி கிராம சேவகர் திரு. முருகையாவிடம் ஒப்படைத்தார். பின்னர் இவர் கிராம சேவகரினால் காங்கேசன்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

காங்கேசன்துறைப் பொலிஸார் இப்பெண்ணை இன்று மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்த பொழுது, 'தாம்திருமணமாகாதவரென்றும் தமக்குச் சுகயீனம், மனக்கவலை என்பனவும் இதன் காரணமாகவே தாம் தற்கொலை புரியமுயன்றதாகவும் அப்பெண் கூறினார்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்டிரேட் இப்பெண்ணை இரட்சணிய சேனையில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

## பிரதமர்மீது 'எத்த' பத்திரிகை வசைமாரி

கொழும்பு, வெள்ளி அரசியல் அறையில் மட்டுமல்ல சுயமரியாதையிலும் கூட பிரதம மந்திரி மோசமடைந்து விட்டார் என்று 'எத்த' சிங்கள தினசரி அதன் ஆகஸ்ட் 24-ந் திகதி இதழில் கண்டித்திருக்கின்றது.

பிரதிநிதிகள் சபையில் சமீபத்தில் அவசரகால நிலைமை குறித்து பிரதமர் பேசியதைச் சுட்டிக் காட்டியுள்ள 'எத்த' பத்திரிகை, 'எத்த' பத்திரிகையின் காரணமாகத்தான் அவசரகால நிலைமை நீடிக்கப்படுவதாக பிரதமர் கூறியிருக்கிறு என்று குற்றஞ்சாட்டியுள்ளது.

## 10லட்சம் ரூபா நஷ்டம்

கொழும்பு, வியாழன் 1964—65க்கான நிதியாண்டில் மோட்டார் போக்குவரத்து இலாகா தனது வருமானத்தில் 10 லட்சத்துக்கும் அதிகமாக இழந்துள்ளது.

கணிக்கப்பட்ட வருமானம் ரூ.13,350,600. ஆனால் ஆசென்ஸ் புதுப்பித்தல், மோட்டார் வாகன விற்பனை இவற்றின்மூலம்கிடைத்த வருமானமே ரூபா. 12,250,006.

# பிரதமர் இந்திராவை ஜயப்பிரகாஷ் சந்தித்தார்

புதுடில்லி, ஆக. 25 சர்வோதயத் தலைவர் திரு. ஜயப்பிரகாஷ் நாராயணன் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து சுமார் நாற்பத்தைந்து நிமிட நேரம் வரை பேச்சுக்கள் நடத்தினார்.

முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லாவை அண்மையில் சந்தித்து மூன்று தடவைகள் பேச்சுக்கள் நடத்திய திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் இப்பேச்சுக்களின் விபரங்களை பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால் இப்பேச்சுக்களின் விபரங்கள் பற்றி உடனடியாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு கே. காமராஜரையும் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதாகதெரிய வருகிறது.

## 3580 இளைஞருக்கு 10,000 ஏக்கர்

கொழும்பு, வியா. அடுத்த வருடத்தில் ஐம்பது இளைஞர் குடியிருப்புக்களை அமைக்க காணி, நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சு உத்தேசித்துள்ளது. எல்லாமாக 3580 படித்த வாலிபர் 10,000 ஏக்கர் நிலத்தில் குடியிருத்தப்படுவர். இக்காணிகளில் நெல்லும் மற்றும் உணவுதானியங்களும் பயிரிடலாம். ஏற்கனவே இருபத்தைந்து குடியிருப்புக்களுக்கான திட்டங்களை அமைச்சு விபரமாகத் தயாரித்துள்ளது

இன்னும் ஐந்து வருடங்களில் 25,000 படித்த வாலிபரை ஏறத்தாழ 80,000 புதியநிலத்தில் குடியிருத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

## தொழிலாளர்பிளவினால் நஷ்டமே அடைவர்

### நித்தியானந்தா கருத்து

கொழும்பு, வியாழன் 'சாதி, மத, மொழி அடிப்படையில் தொழிலாளர் பிரிந்து நின்றால், அவர்களுடை லாபம்பெறும் சக்தியை இழந்துவிடுவார்கள். இவ்வாறு பிரசித்திபெற்ற பொதுச்சேவைத் தொழிற்சங்கவாதியான திரு. கே. வி. நித்தியானந்தா, திரு. ரி. ஸ்ரீராமநாதன் தலைமையில் உள்ள தொழிற்சகக்குழுவின் முன் சாட்சியமளிக்கை குறிப்பிட்டார்.

இத்தகைய பிரிவுகள், தொழிற்சங்கக் கொள்கைகளுக்கே மாறானவை என்று அவர் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் கூட, முழுத் தொழில் சக்தியினதும் 15 வீதம் கூடத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவில்லையெனக் கணக்கிடப்பட்டுள்ளதென்றும் அவர் கூறினார்.

இந்நாட்டில் பல்வேறு தொழிற்சங்கங்கள் தொகையாக இருப்பதையிட்டுத் தாம் வருந்துவதாகவும் அவர் கூறினார்.

இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி என்னவெனில், தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதில் ஒரு குறிப்பிட்ட அங்கத்துவத் தொகையிருக்க வேண்டுமென்று வலியுறுத்துவதேயாகும் என்று அவர் மேலும் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

பொலிஸ் படையில் தொழிற்சங்க நடவடிக்கையை அங்கீகரிக்க மறுப்பது நியாயமற்றதாகுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

தொழிற் சங்கமானது சுயாதீனம்பெற்றஜனநாயக இயக்கமொன்றாகு மென்பதே எனது நம்பிக்கை. இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் வளர்புக் குழந்தை போல் பாவிக்கப்பட்டு வந்துள்ளது.

''எனினும், இந்நாட்டில் தொழிற்சங்க இயக்கத்தை நிறுவி, வளர்த்ததற்காக நாம் அரசியல் வாதிகளுக்கு நன்றி தெரிவிக்கக்கடமைப் பட்டுள்ளோம்''

தேர்தற் கொமிஷனரைப் போல தொழிற்சங்க ரெஜிஸ்தராரும் மந்திரிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட சுதந்திர உத்தியோகத்தராக்கம் பட வேண்டுமெனவும் திரு. நித்தியானந்தா கூறினார்.

# நாடற்ற பிரஜை.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் இந்த நாட்டுக்கு விசுவாசமாக வாழவேண்டுமென்றும் விரோத நடவடிக்கைகளில் இறங்கக்கூடாதென்றும் வாழ்க்கை சுபீட்சமாகவும் சந்துஷ்டியாகவும் இருக்க வேண்டுமானால், வாழும் நாடு செழிப்பாக இருக்கவேண்டுமென்றும் இந்நாட்டில் வாழ விரும்புவர் இந்நாட்டின் நலனில் அக்கறைகாட்ட வேண்டுமென்றும், இந்தியா செல்பவர்கள் இதனை நட்பு நாடாகக் கருதவேண்டுமென்றும் கூறிய ஹைகமிஷனர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் சரித்திர காலந்தொட்டே நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் புத்தபகவானின் பஞ்சசீலக் கொள்கையில் இரு நாடுகளும் பலமான நம்பிக்கை வைத்திருப்பவை என்றும், இரு நாடுகளும் ஆத்மீகத் துறையிலும் ஒத்திருப்பவையென்றும் அவர் சொன்னார்.

இந்திய தேசிய கீதத்துடன் ஆரம்பமான இக்கூட்டத்துக்கு முதலியார் சின்னத்தம்பி தலைமை வகித்தார். இங்கு வாழும் இந்தியர்கள் அரசியல் வாதிகளின் வலையில் சிக்கி விடவேண்டாமெனத் தலைவர் எச்சரித்தார்.

## சுகர்ணோவுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### இந்தோனேஷியாவில் கொந்தளிப்பு ஏற்படுமா

இந்தோனேஷிய சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி சுகர்ணோ நிகழ்த்திய சொற்பொழிவு குறித்து ஆலோசிப்பதாக இன்று இந்தோனேஷிய நாடாளும் மன்றம் அந்தரங்கக் கூட்டம் ஒன்றை நடத்தியது.

தமது சுதந்திரதின சொற்பொழிவு குறித்து விளக்கம் தரும்படி எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்றுதான் அந்த எச்சரிக்கையின் இறுதித் தினம்.

இதற்கிடையில் சுகர்ணோவை ஆதரிக்கும் அரசியல் இயக்கங்களும், ராணுவ அதிகாரிகளும் சுகர்ணோ எதிர்ப்பு இயக்கத்துக்கு சவாலாக இருப்பதால் சுகர்ணோ பதவியிலிருந்து எந்த வகையிலும் நீக்கப்பட்டால் நாட்டில் குழப்ப நிலை ஏற்படும் என்றும் வதந்திகள் உலவுகின்றன.




## கொழும்பு

### 26 8-66 வெள்ளி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 துதிப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீட்டர்&49 மீட்டர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி—சைவசஞ்சிகை, 7-45 பாட்டு 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-15- பேச்சு, 9-30தேர்ந்த இசை, 10-00நேயர் விருப்பம்.

## புங்குடுதீவில் விஞ்ஞான பொருட்காட்சி

புங்குடுதீவு, வியாழன் புங்குடுதீவில் விஞ்ஞானப் பொருட்காட்சி ஒன்றை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இப்பொருட்காட்சி அநேகமாக அடுத்தமாதம் 20-ம் திகதி நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இரண்டு தினங்கள் வரை நடைபெறும் பெற்றோர்தின விழாவிலே இடம்பெறும் இவ்விஞ்ஞான பொருட்காட்சி முக்கிய அம்சமாகவிருக்கும். இதனுடன் விளையாட்டுப்போட்டிகளும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்,

இப் பொருட்காட்சியை வெற்றிகரமாக நடாத்துவதற்கு மகாவித்தியாலய அதிபர் நிதியொன்றையும் ஆரம்பித்துள்ளார்.

## தொழிற்பதிவுக் கந்தோரில் மோசடி!

கொழும்பு, வியாழன் மத்திய தொழிற்பதிவுக் காரியாலயத்திலிருந்து இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள தொழில் ஸ்தானங்கள் பிற்கதவு வழியாக நுழைந்தோருக்கே அதிகமாகக் கிடைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் இக் காரியாலயத்திலிருந்து 1191 பேர் தொழிலுக்கு அழைக்கப்பட்டனர். ஆனால் 520 பேரே தேர்வுப்பகுதியினரால் அழைக்கப்பட்டனர். மற்ற 671 பேரும் பிற்கதவால் உத்தியோகங்கள் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

## இளைஞன் தற்கொலை

மாவிட்டபுரம், வியா. கீரிமலையைச் சேர்ந்த 19 வயதுள்ள இளையக்குட்டி நாகராசா என்ற இளைஞன் நஞ்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டான்.

இவரது மரணம் குறித்து தெல்லிப்பளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என். சுந்தரமூர்த்தி விசாரணைகள் நடத்தினார். விசாரணையின்போது இறந்தவரின் பெற்றோர், சகோதரன் ஆகியோர் சாட்சியமளித்தனர். காங்கேசன்துறை உதவி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடத்தினார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## சனசமூக நிலைய ஆண்டு விழா

புங்குடுதீவு, வியா. புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமூக நிலைய ஆண்டுவிழா புங்குடுதீவு ஶ்ரீ க. ச. வ. சங்கதின் தலைவர் திரு. இ. மாரிசலின் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டு வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டது. நடப்பு வருடத்திற்கான உத்தியோகத்தர்களாக திரு. ச. அந்தோனிப்பிட் தலைவர், செயலாளர்: திரு. ம. மங்களநாயகம், உப தலைவர்: ம. லீயோன், உப செயலாளர்: தோ. அல்[illegible]

## நல்லூர்த் திருவிழா

### ஈழநாடு வண்ணமலர்

நல்லூர்க் கந்தன் திருவிழா மலர் ஒன்று விரைவில் வெளிவருகிறது. சஞ்சிகை வடிவில் 'ஈழநாடு' வெளியிடும் இம்மலரில் நல்லூர்க்கந்தனின் சிறப்பைப்பற்றி இந்திய, இலங்கை அறிஞர்களின் கட்டுரைகள், கவிதைகளுடன் ஆலயத்தின் சரித்திரக் குறிப்புக்களும் இடம்பெறுகின்றன.

நல்லூர்க்கந்தனின் திருஉலாக்காட்சிகள் பலவர்ணங்களில் மலருக்கு அழகூட்டுகின்றன.

அதிக பக்கங்கள். விலை 50 சதம்தான்.

மலரின் பிரதிகள் வேண்டும் ஏஜண்டுகள் முன்கூட்டியே 'ஈழநாடு' விநியோகப் பகுதியினருடன் தொடர்பு கொள்ளவும்.

## பிரார்த்தனைக் கூட்டம்

யாழ்ப்பாண, வெள்ளி காலஞ்சென்ற திரு. ஐ. க. மூர்த்தியின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனைக் கூட்டம் சமீபத்தில் ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானத்தில் முதலியார் திரு. செ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் மு ஞானப்பிரகாசம், ஆ. குணநாயகம், வி. மகேசன் பண்டிதர் மு. கந்தையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

(3-ம் கலத் தொடர்ச்சி)

வெவிச்சோர், பரிசோதகர்: திரு ச. அ. மனுவேற்பிள்ளை ஆகியோரும் நிர்வாக அங்கத்தவர்களாக திருமதி அ. எலிசபேத், நீ. வ. மார்சல், இ மாட்டின், தே. புல்லராசா, அ. கிரிபியேல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கலைவிழா

உடுப்பிட்டி, வியாழன் முசலி பிரதேச கலைமன்றக் கலைவிழா இம்மாதம் 31-திகதி நானாட்டான் ஶ்ரீ. க. பாடசாலை மைதானத்தில் முசலிப் பிரிவு காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## போகிற போக்கில்...

இந்நாட்டின் பொதுமக்களைப் பொலிஸார் அடித்துத் துன்புறுத்துவது பற்றி நாளும் தினமும் நாம் பத்திரிகைகளில் படித்துவருகிறோம்.

பொலிஸ்காரரின் இந்தத் தாக்குதல்களும், பயமுறுத்தல்களும் எவ்வளவுதூரம் அளவுகடந்து சென்றுள்ளன என்பதை, அண்மையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் விடுத்த எச்சரிக்கையே தாராளமாக எடுத்துக்காட்டுகிறது.

பொலிஸ்காரர் மாத்திரமல்ல, இராணுவத்தினரும்கூட இப்படிப் பொதுமக்களைப் பயமுறுத்துவதிலும், இம்சிப்பதிலும் ஈடுபடுவது வழக்கமாகிவிட்டது.

ஒரு நாட்டின் பொலிஸ்காரரும், இராணுவத்தினரும் அந்நாட்டு மக்கள் கள்வர், காடையர்களிடமிருந்தும், வெளிநாட்டுத் தாக்குதலிலிருந்து எவ்வித பயமுமின்றிப் பாதுகாப்புடன் வாழவே அந்நாட்டு அரசாங்கத்தினால், பொதுமக்கள் பணத்தின் தயவில் நிறுவப்பட்டுள்ளனர்.

சர்வாதிகார நாடுகளில் விஷயம் வேறு. அங்கு உள்ளூர் மக்களே தமது பொலிஸ்காரர், இராணுவத்தினரைக் கண்டு பயந்து நடுங்கவேண்டியிருக்கும்.

ஆனால் இலங்கை போன்ற ஜனநாயக நாட்டில் ஏன் இந்த நிலை? பொலிஸ், இராணுவம், ஆகிய படைகளுக்கு அங்கத்தினர் சேர்க்கப்படும் முறை, அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி, அவர்களின் வாழ்க்கை வசதிகள், சமூகத்தில் அவர்கள் வகிக்கவேண்டிய பங்கும், வகிக்கும் பங்கும்-இத்தியாதி பல பிரச்னைகளை பொலிஸ், இராணுவக் கொமிஷன் ஒன்று ஆராய்ந்து, அதன் முடிவுகளையும் ஆலோசனைகளையும் சமர்ப்பித்தால்தான் ஏன் இந்தநிலை என்பதையும், நிலையை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் நாம் அறியமுடியும்.

அண்மையில் இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் நடைபெற்ற சம்பவமொன்று, அங்குள்ள பொலிஸ்காரர் எத்துணையளவு பொதுமக்களின் அன்பையும், நேசத்தையும் சம்பாதித்துள்ளனர் என்பதைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

ஆயுதம் தரியாத மூன்று பொலிஸ்காரரைக் காரில் வந்த ஒரு கூட்டத்தினர் சுட்டுக் கொன்றுவிட்டு மறைந்துவிட்டனர்.

இச்செய்தி காட்டுத்தீபோல் நாடெங்கும் பரவிற்று. தமது நாட்டுப்புற வாசஸ்தலத்தில் ஓய்வெடுக்கச் சென்றிருந்த இங்கிலாந்துப் பிரதமர் திரு. ஹறோல்ட் வில்ஸன் செய்தியைக் கேள்விப்பட்டதும் உடனடியாக லண்டன் திரும்பினார்.

பொதுமக்களும் கண்டனம் தெரிவித்தனர். பொலிஸ்காரர் தொழிற்சங்கம் ஒன்றில் இங்கிலாந்தில் மீண்டும் தூக்குத்தண்டனையைக் கொண்டுவரவேண்டும் அல்லது பொலிஸ்காரர் ஆயுதந்தரித்தவர்களாக இருக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரியுள்ளனர். பெண்கள் தெருக்களில் "தூக்குத் தண்டனையைத் திருப்பவும் கொண்டுவா" என்று கூச்சலிட்டுச் சென்றனர்.

அதுமாத்திரமா? இறந்த பொலிஸ்காரரின் குடும்பங்களுக்கு ஓர் நிவாரணநிதியைத் தொடக்குமுகமாக 100,000 பவுண் அளிக்கப் பெயர் வெளியிட விரும்பாத ஓர் அனுதாபி முன்வந்துள்ளார்!

இன்று இங்கிலாந்து முழுவதும் பொலிஸ்காரரின் கொலை, பலத்த கண்டனங்களை அரசாங்கத்துக்கு எதிராகவும், பொலிஸ்காரருக்காக அளவுகடந்த அனுதாபத்தையும் கிளப்பிவிட்டுள்ளது.

இது எதைக் காட்டுகின்றது? ஏன் இந்தப் பொலிஸ்காரர்மீது பொதுமக்களுக்கு இவ்வளவு அக்கறையும் அனுதாபமும்? ஏனெனில் இங்கிலாந்துப் பொலிஸார் தம் கடமையை நிறைவேற்றுபவர். பொதுமக்களுடன் அன்பாகப் பழகுபவர். சிரித்த முகமும், இன்சொல்லும் தான் அவர்களின் பலமான ஆயுதங்கள். ஆகவே தான் நாட்டு மக்கள் அவர்களுக்கு இத்துணை அன்பையும், அனுதாபத்தையும் சொரிகிறார்கள். பொலிஸ்காரருக்கு ஒன்றென்றால், அது தம்மையும் பாதிப்பதாகப் பொதுமக்கள் கருதுமளவுக்கு அந்த நாட்டுப் பொலிஸ்காரர்கள் மக்கள் உள்ளங்களில் இடம்பிடித்திருக்கிறார்கள்.

அந்த நிலை இந்நாட்டில்-வரும்நாள் எந்நாளோ?

—மனோகரன் மயில்வாகனன்

# நாடும் நாமும்

## மனிதனுக்கு முன்னதாகவே 'ஏர்க்கண்டிஷன்' வசதியுடன் வாழ்ந்த கறையான்கள்!

மனிதன் முன்னேற்றத்துக்கும், நல்வாழ்வுக்கும் தீங்கிழைக்கும் கிருமி வகைகளில் கறையான் ஒன்று. விலைமதிப்புள்ள சரக்குகளை எல்லாம் கூட நொடிப் பொழுதில் பாழாக்கி விடக்கூடிய இந்த அபாயகரமான கிருமி இனத்தை எப்படி அழிப்பது என்று தெரியாமல் விஞ்ஞானிகளும் திண்டாடுகிறார்கள். அவற்றிடமிருந்து நம் பொருள், பண்டங்களைக் காப்பாற்றிக்கொள்ள முதலில் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி தேவையாகிறது. ஜெர்மனி நாட்டில் லெவர்கூஸன் எனும் நகரிலுள்ள ஆராய்ச்சிக் கூடமொன்று கறையானைப்பற்றிய நுண்ணிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அவற்றைச் சமாளிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றது

கறையான்கள் இந்தியாவில் மட்டுமல்ல; உலக நாடுகள் பலவற்றிலும்கூட தன் 'தொண்டு'களை ஆற்றித்தான் வருகிறது ஆபிரிக்க நாடுகளில் அநேகமாகத் தென்னை மரங்களையெல்லாம் கறையான்கள் ஆக்கிரமித்துக்கொள்கின்றன. பூமியிலிருந்து ஏறத்தாழ 20 அடி உயரத்துக்கு மலைபோல இவை தமது இருப்பிடங்களை அமைத்துக்கொள்கின்றன அதேபோல பூமிக்கு அடியில் 90 அடிகள் வரை சென்று அவை வசிக்கின்றன. கல், உலோகம், கண்ணாடி எல்லாவற்றையும் சிறுசிறிதாக அழிக்க மக்கள் என்னென்னவோ முயற்சிகள் கையாண்டும் பயனில்லை. சிலவற்றைத்தான் அழிக்க முடிகிறது. பல தப்பி ஓடி விடுகின்றன. கறையானுக்குப் பெரிய குடும்பமுண்டு. அவற்றுள் 'ராணி'யாகப் புழங்கும் கறையான் ஒவ்வொரு நாளும் 34,000 முட்டைகள் இடுகின்றன என்றால் அவற்றின் இனப்பெருக்கச்சக்தியைப் பார்த்துக்கொள்ளுங்களேன்!

பூமியை 90 அடி வரை தோண்டி அதற்கும் கீழே வாழ்ந்துவரும் இக்கறையான் இனம் அங்கே '30 டிகிரி சென்டிகிரேட் சீதோஷ்ண நிலை'யில் சுகமாக ஜீவிக்கின்றன. 'அச் சீதோஷ்ண நிலை'தான் ஒத்துவரக் கூடியதென்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆகவே, மனிதனுக்குப் பல காலம் முன்னதாகவே இந்தக் கறையான்கள் 'ஏர் கண்டிஷன்' வசதியுடன்வாழ்ந்து வருகின்றன.

### பாதுகாப்புக்கு மெழுகுப் பூச்சு!

உப்புக் காற்று, பருவ நிலை மாறுதல் இவற்றால் ஏற்படும் சேதத்தைத் தடுத்து உருக்குப் பொருள்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய மெழுகுப் பூச்சு ஒன்றை அப்ரில் இன்டஸ்ட்ரியல் வாக்ஸஸ் லிமிட்டெட் என்ற லண்டன் நிறுவனம் தயாரித்து இருக்கிறது.

அணுவிசை நிலையங்களில் உபயோகிப்பதற்காக தயாரிக்கப்பட்ட இந்த மெழுகுப் பூச்சு குறைந்த பட்சம் 25 ஆண்டுகளாவது பாதுகாப்பு அளிக்கக்கூடும் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள்.

### பலே கைதி!

சிறைக் கைதிகள், சிறை நூலகத்திலிருந்து புத்தகங்கள் எடுத்துப் படிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஒரு கைதி, தன்னுடைய அறையிலமர்ந்து வெகு மும்முரமாக ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான். அவ்வழியே வந்த சிறை அதிகாரி 'என்ன புத்தகமப்பா அது, விழுந்து விழுந்து படிக்கிறாயே' என்று கேட்டார். அவன், சலிப்போடு 'எப்பொழுதும் படிக்கிற தப்புவது எப்படி' என்கிற புத்தகம்தானுங்க என்றான்.

### ஆங்கில எழுத்தாளர் குவித்த செல்வம்

சென்ற டிசம்பர் மாதம் 91-வது வயதில் காலமான எழுத்தாளர் சாமர்ஜெட் மாம் சுமார் ரூபாய் 13 லட்சத்து 10 ஆயிரம் மதிப்புள்ள சொத்துக்களை பிரிட்டனில் விட்டுச் சென்றிருக்கிறார் என்பது இங்கே தெரியவந்துள்ளது. ஆனால் அது அவரது மொத்த ஆஸ்தியின் சிறிதளவேயாகும். அவரது [illegible] ரூ. 267 கோடியாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஆண்கள் மீதுதான் நுளம்புகளுக்கு மோகம்!

பிரிட்டிஷ் டாக்டர்களின் கருத்துப்படி, ஆண்களையே நுளம்புகள் விரும்புவதாகத் தெரிகிறது.

அதுவும் இளமை முறுக்குள்ள ஆண்களையே அவை விரும்புகின்றனவாம். பெண்கள் குழந்தைகள், வயோதிபரை அவை விரும்புவதில்லையாம். இத்தகவல்களை லண்டன் மருத்துவ சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

என்றாலும், 838 பேர் மீது நடாத்தப்பட்ட பரிசோதனைகளின்போது. நுளம்புகளுக்குச் சற்றும் பிடிக்காத ஒரு மனிதர் இரத்தத்தை அறிய முடிந்தது. இவரை ஏன் நுளம்புகளுக்குப் பிடிக்கவில்லை என்பது இன்னும் ஓர் புதிராகவே இருந்துவருகிறது. ஆனால் எல்லோரையும் நுளம்புக்கடியிலிருந்து காப்பாற்றக் கூடிய வழியொன்றினைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கைகளை இம்மனிதர் மேலும் உற்சாகப்படுத்த உதவியுள்ளார்.

(பி.டி.ஐ)

நடந்த விஷயம்

## தாடியோ தாடி!

சீக்கியர்கள் எவ்வொருவரும் தாடி வளர்க்கிறார்களே அதற்கு என்ன காரணம் தெரியுமா?

1664-ம் வருடம் நடந்த விஷயம் தான்.

சீக்கியர்கள் மதகுருவாக டெக்பகதூர்சிங் என்பவர் இருந்துவந்தார். அப்போது டில்லியில் ஆட்சி செலுத்திய முஸ்லிம் அரசர் அவுரங்கசீப்.

சீக்கியர்களையும் முஸ்லிம் அல்லாதவர்களையும் அவுரங்கசீப் கொடுமைப் படுத்தினார். இதை எதிர்த்தார் டெக்பகதூர்சிங். அதன் பலனாக டில்லிக்கு அவர் அழைக்கப்பட்டார். அவரை முஸ்லிம் மதத்தில் சேர்ந்துவிடும்படி அவுரங்கசீப் வற்புறுத்தினார். அதற்கு மறுத்துவிட்ட சீக்கிய மதகுரு தூக்கில் இடப்பட்டார்.

அதன்பிறகு மதகுருவானவர் அவருடைய மகன் குரு கோவிந்தசிங் தந்தையைக் கொன்றதற்காக பழிக்குப் பழி வாங்கப்போவதாக அவர் வாக்குறுதியளித்தார்.

அதன் அடையாளமாகத் தாடியைஎடுப்பதில்லைஎன்று சபதம் செய்தார். பழிவாங்கும் ஆயுதங்களாக உடைவாள், இரும்பு.காப்பு ஆகியவற்றை அணிந்தார்.

இதைத் தொடர்ந்து எல்லா சீக்கியர்களும் தாடி வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் பழக்கம் அப்படியே இன்றும்நிலைத்து விட்டது.

## புகைத்தால் மாரடைப்பு!

மேற்கு ஜெர்மனியில் 50 சதவிகித ஆண்களுக்கு திடீரென்று நேரடியாக 'மாரடைப்பு' தாக்கும் அபாயம் இருக்கிறது. நாட்டில் வளம் அதிகரித்துவருவதால் 'வரம்பற்ற' வாழ்க்கை ஒரு காரணமாகும். கண்டபடி புகை பிடிப்பது மற்றொரு காரணமாகும். புகை பிடிப்பதைக் கைவிட்டால், ஆபத்துகுறையும் என்கிறார்கள் ஜெர்மன் விஞ்ஞானிகள்.

மற்ற தொழிலாளர்களுடன் ஒப்பிடும்போது உலோகத் தொழிலாளர்களுக்கு மாரடைப்பு அபாயம் அதிகம் உண்டு. இப்பட்டியலில் அடுத்து இடம் பெறுகிறவர்கள் லாரி டிரைவர்கள், கட்டடத் தொழிலாளர்கள் சாதாரண மனிதர்களைவிட, கடின உழைப்பும் பேராசையும் கொண்ட மனிதர்களை 'மாரடைப்பு' எளிதில் தாக்குகிறது. மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை நடத்துகிற ஆண்களைவிட குடும்பத்தில் நிம்மதியின்றி அவதிப்படுகிற ஆண்களுக்கு மாரடைப்பு அபாயம் அதிகம் உண்டு.

காரைநகரில்

## சச்சாருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி காரைநகர் சைவ மகா சபையினர் இலங்கையின் இந்தியத்தூதுவர் டாக்டர் பீம்சென் சச்சாருக்கு நாளை சனிக்கிழமைமாலை வரவேற்பொன்றை அளிக்கவிருக்கின்றனர்.




## சாகுபடியில் ஒரு புதிய முறை!

கரம்பு நிலத்தில் ஏர் ஓட்டி புழுதியாக்கி புதைப்புச் செய்யாமல் பூமியைக் கீறி சாகுபடி செய்வதற்கு உதவும் இயந்திரம் ஒன்றைப் பிரிட்டிட் நேஷனல் ரிசர்ச் அண்டு டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் கண்டுபிடித்திருக்கிறது. இந்த இயந்திரத்தை சரிவுகளிலும் சேற்று நிலத்திலும் உபயோகித்துப் பயன் பெறமுடியுமாம். டிராக்டரின் பின்புறத்தில் பொருந்தக்கூடிய இந்த இயந்திரத்தில் வெட்டுச் சக்கரங்கள் உள. டிராக்டர் செல்லும்போது பூமியைக் கிளறிக்கொண்டே போகும் இந்தச் சக்கரங்களை குறிப்பிட்ட கோணத்தில் சாய்த்து வைத்து தேவையான ஆழத்திற்கு சால் ஓட்ட முடியும்.

வெட்டுச் சக்கரங்களுக்குப் பின்புறத்தில் மற்றோர் கருவி உண்டு. இதில் மூன்று குழாய்கள் இருக்கின்றன. ஒரு குழாய் வெட்டுச் சக்கரங்கள் கிளறிய தடத்தில் ரசாயன உரத்தைத் தூவுகிறது. மற்றோர் குழாய் களை அழிக்கும் மருந்தைத் தெளிக்கிறது. மூன்றாவது குழாய் விதைகளை இடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருசோ இல்லம் சாம்பியன் ஆகியது

## ஆரோக்கிய நாதன் விளையாட்டுக்கழக போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் றெக்ளமேஷன் அரச். ஆரோக்கிய நாதர் விளையாட்டுக் கழகத்தின் 1-வது ஆண்டுவிழா குருநகர் கடற்கரை மைதானத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இப்புதிய விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டுப்போட்டிகள் தொடர்ந்து நான்கு நாட்கள் திரு. டி. ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்றன. இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் குருசோ இல்லம் 92 புள்ளிகளும், லோங் இல்லம் 89 புள்ளிகளும் பெற்று குருசோ இல்லம் சாம்பியனுகியது.

முதல் விழாவிலேயே 5 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, நீச்சல் போட்டி, 15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி போன்ற சிரமமான போட்டிகளை சிறப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் நடத்தி முடித்தனர். வீரர்களின் சரண உயரம்பாய்தல் வெகு சிறப்பாக இருந்தது.

15 மைல் சைக்கிள் ஓட்டம்:— செ. சூசைப்பிள்ளை, செ. பற்றிக், ந. சிங்கரெட்டினம்.

5 மைல் சைக்கிள் ஓட்டம்:- ஏ. குணசிங்கம், கே. சிறில், கே பெனடிற்,

நீச்சல் போட்டி:— பொ. அழகு, எஸ். செல்வசிங்கம், ஆர். இராசசிங்கம்.

மரதன் ஓட்டம்:—எஸ். நடராசா, இ. பிறேடா, ஜே. அருளப்பு.

உயரம்பாய்தல்: மேற்பிரிவு:— இ. பிறேடா, எஸ். நாகராசா, ஏ. செல்வசிங்கம்.


**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30 இரவு 9-30
**JASON AND THE ARGONAUTS**
(Eastman Color)

**REGAL—JAFFNA**
NOW SHOWING
MARSHALL THOMPSON
MALA POWERS
in
**FLIGHT OF THE LOST BALLOON**
(spectrascope-color)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
**வெண்ணிற ஆடை**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா திங்களில் 4 காட்சிகள்
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
**அழகு நிலா**

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# வட இலங்கை தமிழாசிரியர் சங்க பரிசளிப்பு விழா

## 51 பாடசாலைகள் கலந்து கொண்டன

அச்சுவேலி, புதன் வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பரிசளிப்பு விழா வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் 136 பேர் பங்குபற்றினர். 51 பாடசாலைகள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டன. மேற்படி விழா திரு. இ. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

### போட்டிகளின் விபரம்

பேச்சுப்போட்டி கீழ்ப் பிரிவு ஆண்கள்: முதலாம் இடம் ந. மனோகரன் கணேச வித்தியாசாலை. சரசாலை. 2-ம் இடம் எல். மரியதாஸ் ஆர். சி. பாடசாலை நாவாந்துறை மூன்றும் இடம் சு. சூசநதன் மகாவித்தியாலயம் முலைத்தீவு.

பெண்கள்

முதலாம் இடம் ப. சுந்தரேசுவரி கணேச அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நயினைதீவு இரண்டாம் இடம் சு. கௌரிமால விநகுலேஸ்வர வித்தியாசாலை கீரிமலை. மூன்றும் இடம் வே விஜயலட்சுமி சி. சி. பாடசாலை இருபாலை.

மத்தியபிரிவு ஆண்கள்

முதலாம் இடம் ந. செல்வராசா கணேசவித்தியாசாலை சரசாலை. இரண்டாம் இடம் ச. செபஸ்தியான் தங்கராசா சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் குருநகர் மூன்றும் இடம் த. சந்ததி ார் மெய்கண்டான் பாடசாலை பண்ணுகம்.

இ சிதாதேவி விசாலாட்சி வித்தியாசாலை மல்லாகம். வே. தமிழ்ச்செல்வி கன்னியர் மடம் தமிழ் பெண் பாடசாலை யாழ்ப்பாணம். கு. ஞானேசுவரி முருகமூர்த்தி வித்தியாசாலை அராலி.

மேற்பிரிவு ஆண்கள்

வ. போகநாதன் ஸ்ரீ கணேச வித்தியாசாலை சரசாலை. பொ. தருமலிங்கம் சிவப்பிரகாச வித்தியாசாலை சங்கானை. வே. பாக்கியநாதன் ஸ்ரீ கணேசவித்தியாசாலை சரசாலை.

மேற்பிரிவு பெண்கள்

முதலாம் இடம்: சு. மனோன்மணி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை கைதடி. து. திலகவதி சிவப்பிரகாச வித்தியாசாலை சங்கானை ஆ. வி. றிடாமரியா கன்னியர் மடம் தமிழ் பெண் பாடசாலை யாழ்ப்பாணம்.

### இசைப் போட்டி

முதலிடம்: ஸ்ரீ விக்னேசுவரவித்தியாசாலை மீசாலை. இரண்டாம் இடம்: ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை கொக்குவில். மூன்றும் இடம்: சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பழை

### கட்டுரைப் போட்டி

முதலாம் இடம்: அ. யேசுதாசன் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் குருநகர். இரண்டாம் இடம்; வே. குலேந்திரன் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் குருநகர். ப. யோகேஸ்வரி சைவத்தமிழ் வித்தியாசாலை உரும்பராய். பரிசில்களை திருமதி கி. வா. வா ஜகன்னாதன் வழங்கினுர்.

# புதிய சமாதான நீதவான்



முன்னைநாள் கோண்டாவில் இளைப்பாறிய கிராமத் தலைவர் திரு. சி. இரத்தினசிங்கம் புதிய சமாதான நீதவானுக யாழ்ப்பாணப் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சின்னப்பு விதானையாரின் மகனுன இரத்தினசிங்கம், 1935-ம் ஆண்டு முதல் கோண்டாவில், கொக்குவில் பகுதிக்கும் கிராமத்தலைவராகவிருந்து 1963-ம் ஆண்டு ஓய்வுபெற்றுர்.

இவர் கிராம முன்னேற்ற சங்கத்தலைவராகவும், கிராமச் சங்க உபதலைவராகவும், பலநோக்கு சங்க உபதலைவராகவும், மற்றும் பல சங்கங்களிலும் பணியாற்றிவருகிருர்.

## நினைவு தினம்

உடுப்பிட்டி, வியாழன் யாழ். மாநகரசபையின் முன்னுள் அங்கத்தவரும், ஓய்வுபெற்ற மன்னுர் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும் பிரபல சமூகத் தொண்டருமான காலஞ்சென்ற திரு. எம். எஸ் எப் சேவியரின் 5-வது நினைவு தினம் செப்டம்பர் 10-ந் திகதி கொண்டாடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
**அருணகிரிநாதர்**


அரியாலை காந்தி நிலையத்துக்கு

# டாக்டர் சச்சார் ஐம்பது நூல்கள் வழங்கினர்

## திருமதி சச்சார் ரூ. 50 கொடுத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் டாக்டர் பீம்சென் சச்சார் தமது துணைவியாருடன் சென்ற செவ்வாய்க்கிழமை அரியாலை காந்தி சனசமூக நிலையத்துக்கு நேரில் சென்று ஐம்பது நூல்களை அன்பளிப்பாக வழங்கினுர்.

''உங்கள் கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் தான் எதையும்செய்யமுடியும். காந்திய தத்துவங்கள் இங்கு பிரகாசிப்பதைப்பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று டாக்டர் பீம்சென் சச்சார் இங்கு பேசுகையில் குறிப்பிட்டார்.

காந்திய நிலைய போஷகர் திரு. சி. பொன்னம்பலம் இந்த சன சமூக நிலையத்துக்கு நிரந்தரமான இடமில்லையென்றும். ஏற்றவசதிகள் செய்துதரும்படியும் கோரி ஒரு மகஜரைச் சமர்ப்பித்தார்.

மேற்படி நிலைய செயலாளர் மகஜர்ஒன்றை டாக்டர் சச்சாரிடம் சமர்ப்பித்தார். அம்மகஜரில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,-

எமது பாரம்பரியத்தொழிலான நெசவுத் தொழில் இன்று சற்று விழிப்படைந்த நிலையிற் செயற்பட்டு வருகிறது புதிய புதிய நுண்கலைகளை எமக்குப் பயிற்ற எவரும் இல்லை. எமது சமூக மத்தியில் இருந்து சிலரைத் தெரிவுசெய்து நெசவுதொழிலில் விசேஷபயிற்சி 'ஸ்கொலசிப்' மூலம் இந்தியாவுக்குச் [illegible] ஓரும். இதனுல் எமக்குப் பொருளாதார விடிவு உண்டாகும் அத்தோடு இந்நாட்டின் பொருளாதாரமும் மேம்படும்.

எமது நிதி நிலைமைக்குறைவினுல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் போன்ற துறைகளில் பட்டதாரிகளாக எமது மத்தியில் எவருமிலர். இந்த இழிநிலையைப் போக்கத் தாங்கள் வருடா வருடம் இலங்கைக்கு சன்மானமளிக்கும் ஐந்து 'ஸ்கொலசிப்பில்' ஒரு ஸ்தானமாகுதல் ஹரிசன மாணவனுக்கு அளிக்க முன்வந்தால் நாம் பெற்ற பெரும் பேருகும் என நம்புகின்ருேம்.

திருமதி சச்சார் பிரசவ விடுதிக்கென ஐம்பது ரூபாவை அன்பளிப்பாக வழங்கினுர்.

## லண்டனுக்கு இந்திரா செல்லமாட்டார்?

புதுடில்லி, ஆக. 25 அடுத்தமாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய நாடுகள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கலந்து கொள்ளாமல் விடலாமென விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதியான முடிவு இன்னும் எடுக்கப்படவில்லையென்றும் அடுத்தசில நாட்களில் எடுக்கப்படுமென்றும் உத்தியோகபூர்வமான பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

திருமதி இந்திரா காந்தியின் சார்பில வெளிவிவகார அமைச்சர் திரு. சுவரண்சிங் மகாநாட்டில் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (பி. டி. ஐ.


**ராஜா**
தயாரிப்புகள்
ஆஸ்பத்திரி படுக்கைகள்
ரூ 180,- ரூ. 185/-



குழந்தைகளின் தொட்டில்கள்



ரூ. 220/-

வைத்திய பரிசோதனை படுக்கைக்ள்



ரூ. 190/-

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பெனி லிமிட்டெட்,
62, புளுமென்டால் ரோட்
கொழும்பு—13
தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி: 2233/34
கிரும்ஸ்: Teaklog


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இவ்வருட முடிவுக்குள் இலங்கைக்கு நிதி உதவி

## உலக வங்கி வழங்கும்

நியூயோர்க், ஆக 25 உலகவங்கி மீண்டும் இலங்கைக்கு நிதிஉதவி அளிக்கவிருக்கின்றது.

இலங்கையிலுள்ள அந்நிய தனியார்துறை ஸ்தாபனங்கள் பலவற்றை 1963-ம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் தேசியமயமாக்கியதைத் தொடர்ந்து உலக வங்கியும் அமெரிக்காவும் இன்னும் சிலநாடுகளும் அளித்துவந்த நிதிஉதவிகளை நிறுத்தியிருந்தன.

இப்பொழுது இலங்கைக்கு மீண்டும் நிதியுதவியைத் தொடங்குவதற்கு உலக வங்கி ஆலோசித்துவருகின்றது. இந்த நிதிஉதவிகள் இலங்கையின் மீன்பிடித் துறைக்கும் வேறுசைத்தொழில் அபிவிருத்திகளுக்கும் பயன்படுத்தப்படும்.

உலக வங்கி அளிக்கவிருக்கும் நிதிஉதவிகள் மிகவிரைவில் ஆரம்பமாகும் என்று கருதப்பட்டாலும் திகதிபற்றிய உறுதியான முடிவு எதுவும் தெரியவில்லை. எப்படியும் இவ்வருட முடிவுக்குள் இந்த உதவிகள் கிடைக்கும் என்று தெரிகின்றது

## 'தொழில் நுட்பக் கல்வியே இலங்கைக்குத் தேவையானது!

### டாக்டர் பீம்சென் சச்சார் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி "பிறநாட்டு உதவியையும், பிறநாட்டுப் பொருட்களையும்எதிர்பாராமல் இந்த நாட்டு மக்களே தமது சுய தேவைகளைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு இலங்கை ஒரு இயற்கைவளம் கொழிக்கும் நாடாகும். அதைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு தொழில்நுட்பக் கல்வியே இலங்கைக்குத்தேவையானது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இக்கல்லூரியை நான் எனது நாட்டு மக்கள் சார்பாக மனமார வாழ்த்துகிறேன்."

இவ்வாறுவண்ணை இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில்இயங்கும் தொழில் நுட்பக்கல்லூரியில் நேற்றுக்காலை டாக்டர் பீம்சென் சச்சார் பேசுகையில் கூறினார்.

டாக்டர் சச்சார் தொழில் நுட்பக்கல்லூரியைச்சுற்றிப் பார்வையிட்டார். பின்னர் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

வேலையில்லாப் பிரச்சனை இலங்கைக்கு மட்டும் சொந்தமானதல்ல. செல்வம் கொழிக்கும் நாடென்று பலராலும் வர்ணிக்கப்படும் அமெரிக்காவிலேயே இந்தப் பிரச்சனை தலைவிரித்தாடுகிறதென்றால் அண்மையில் சுதந்திரம்பெற்ற இலங்கை எம்மாத்திரம்? எனவே தொழில் நுட்பம் தெரிந்த வாலிபர்களே! உங்களால் அன்றி வேறு எவராலும் இந்த நாட்டை முன்னேற்ற முடியாது. உங்களது தீவிர உழைப்பினாலே ஒரு முன்னேற்றமான இலங்கையை உருவாக்குங்கள்.

இலங்கையும் இந்தியாவும் கலாச்சாரத்திலும், சமயத்திலும், ஆத்மீகத்திலும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக இணைந்து வாழ்வது மகிழ்ச்சியளிக்கிறது. சமாதானம், ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை ஆகியவற்றில் இந்தியாவும், இலங்கையும் சகோதரத்துவம்கொண்டுள்ளது. நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்துக்கும் வாலிபர்கள் சமயவாழ்க்கையைப் பின்பற்றவேண்டும்.

இறைவன் உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளுக்கும் தந்தையைப் போன்றவன். இதைமனதில்கொண்டு தேச, மத, சாதி வேறுபாடின்றி சகோதரத்துவத்துடனும் சமாதானத்துடனும் வாழ்வோமாக.

திரு. எஸ். யு. சோமசேகரம், பேசுகையில், சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியின் பிரதமசிஷ்யராகவும், அரசியல்பாட்டாளியாகவும் சேவைசெய்த டாக்டர் சச்சாரின் வருகையை முன்னிட்டு இத்தொழில் நுட்பக்கல்லூரி அளவில்லாத மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். கல்லூரிஅதிபர் எஸ். ஜே. அன்ரனி கூட்ட முடிவில் நன்றியுரை வழங்கினார்.

## எதிரிகள் விடுதலை

### புன்னாலைக்கட்டுவன் கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி புன்னாலைக்கட்டுவன் கொலைவழக்கில் சாட்சியங்கள் முரண்பாடாக இருப்பதாக நேற்று ஜூரிசபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து எதிரிகள் மூவரையும் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா விடுதலை செய்துதீர்ப்பளித்தார்.

வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட இவ் வழக்கில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த வேலன் முருகன் என்பவரை அதே ஊரைச்சேர்ந்த நாகலிங்கம் கந்தையா, நாகலிங்கம்சிவலிங்கம், நாகலிங்கம் வீரபாகு ஆகிய மூவரும் கொலைசெய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

காலஞ்சென்றவரின் மகன் முருகன் இராசதுரை, மனைவி பொன்னி, டாக்டர் வேதாரணியம் ஆகியோர்சாட்சியமளித்தனர்.

1-ம், 2-ம்எதிரிகள்சார்பில் அட்வகேட் ஜே.ஏ.பி. செருபிம் திரு ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். மூன்றும் எதிரி சார்பில் அட்வகேட் திரு.கே.வி.எஸ். சண்முகநாதன் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் அஜரானார். அரசாங்கத்தின்சார்பில் திரு. கே. சோமாஸ்கந்தன் ஆஜராயிருந்தார்.

## பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ.வெற்றி

சுழிபுரம், வியாழன் பண்டத்தரிப்பு வை எம் சி. ஏ. கோஷ்டிக்கும் சென் அந்தோனியா கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு வை. எம். சி ஏ. கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். பண்டத்தரிப்பு விளையாட்டு மைதானத்தில நடைபெற்ற போட்டியில பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. நாலு கோல்களை போட்டனர். அந்தோனியாகோஷ்டியினர் கோல் எதுவும்போடவில்லை. ஆர். ஜெயபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## குளிக்கும்போது மரணமானர்

பருத்தித்துறை, வியா கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது, திடீரென இரத்தம் கக்கி நாகலிங்கம் மாணிக்கம் என்பவர் மரணத்துக்குள்ளானர். பருத்தித்துறை மார்க்கெட் மேற்கு ஒழுங்கையிலேயே இந்தச் சம்பவம் நடந்தது

பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவரைப் பார்வையிட்ட அதிகாரி அவர் இறந்திருப்பதாகக் கூறினார்.

பருத்தித்துறைப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர் எஸ், இராமநாதன் மரணவிசாரணை நடத்தினார்.

டாக்டர் திரு. சண்முகம் ஜெகராசா பிரேத பரிசோதனை நடத்தினார். இறந்தவரின் இடதுபக்கத்து இரத்தாசயத்திலிருந்து இரத்தம் கடுமையாக வெளியேறியதைத்தொடர்ந்து ஏற்பட்ட அதிர்ச்சியினால் மரணம் சம்பவித்ததென டாக்டர்தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஆசிரியர்கள் வேறு பதவிகள் வகிக்கலாம்

கொழும்பு, வியாழன் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயக்குழுக்களில் ஆசிரியர்கள் பதவி வகிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய பதவி வேலைகள் ஆசிரியர்களின் உத்தியோகபூர்வமான கடமைகளைப் பாதிக்கக்கூடாது.

இவ்வாறு பதில் கல்வி டைரக்டரினால் கைச்சாத்திடப்பட்ட அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது

ஏற்கனவே இத்தகைய பதவிகள் வகிப்பவர்களின் பதவிக்காலம் முடிந்த பின்னர், அவர்கள் மீண்டும் அப்பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட விரும்பினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அனுமதிபெறவேண்டும்.

புதிதாகப் பதவிவகிக்க விரும்புவோர், முன்னதாகவே அனுமதி பெற்றிருக்க வேண்டும். உதவி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தலைமை ஆசிரியர்களிடமிருந்தும், தலைமைஆசிரியர்களைப் பொறுத்த வரையில் தொகுதி இன்ஸ்பெக்டரிடமிருந்தும் அனுமதி பெறவேண்டும்.

இத்தகையபதவிகளைவகிப்பவர்கள் பற்றி ஏதாவது புகார் செய்யப் பட்டால், அவர்கள் தொடர்ந்து அப்பதவிகளில் இருப்பதா இல்லையா என்பது பற்றி உதவி கல்வி டைரக்டர் அல்லது சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள [illegible]

## விலை வீழ்ச்சியைத்தவிர்க்க உற்பத்தியை குறைக்கவேண்டும்

### தேயிலை உற்பத்தி நாடுகளுக்கு வர்த்தக மந்திரி யோசனை

கொழும்பு, வியாழன் உலக நாடுகள் தேயிலை உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று இன்று வர்த்தக அமைச்சர் டாக்டர் பீரிஸ்கருத்து தெரிவித்தார். உலக மார்க்கெட்டுகளில் தேயிலை விலைவாசிகள் வீழ்ச்சியுறுவதைத் தவிர்ப்பதற்கு தேயிலை உற்பத்தியை உலக நாடுகள் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று மந்திரி கூறினார்.

இன்று காலை ஆரம்பமான தேயிலை உற்பத்தி பற்றிய கருத்தரங்கில் மந்திரி உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தேவைகளைப்பாதிக்காத வகையில் உற்பத்திகளை முறைப்படுத்திக் கொள்வதற்கான ஒரு ஒப்பந்தத்தை உலக தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று மந்திரி கூறினார்.

மத்தியப் பிரதேசத்திலும் தாழ்ந்தபிரதேசத்திலும் உற்பத்தியாகும் தேயிலை விலைகள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாவும் தேயிலை ஏற்றுமதியாளர் எதிர்காலம் மோசமடையக்கூடும் என்றும் மந்திரி கருத்து வெளியிட்டார். உற்பத்தியாளர்கள் சிறந்த ரக தேயிலையை உற்பத்தி செய்வதில் ஊக்கம் கொள்ளவேண்டும் என்றும் அதன் மூலம் வெளிநாட்டில் கிராக்கியை ஏற்படுத்தமுடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை தனது வெளிநாட்டுச் செலாவணியில் 60 சதவிகிதத்தை தேயிலை ஏற்றுமதிமூலம் பெறுகின்றது. எனவே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க இந்த வருமானம் குறையாமற்படி பார்த்துக்கொள்வது அவசியம் என்று மந்திரி கூறினார்.

## எம். பி. க்கள் தந்திசலுகை ரத்தாகவேண்டும்

### அரசாங்கத்துக்கு தந்தி இலாகா தெரிவித்துள்ள சிபார்சு

கொழும்பு, வெள்ளி

எம். பி.க்களும் செனட்டர்களும் இப்போது அனுபவிக்கும் இலவச டெலிபோன்வசதிகளை ரத்துசெய்துவிடவேண்டுமென்று அரசாங்கத்துக்குத் தந்தித் தொடர்பு இலாகா சிபார்சு செய்திருக்கின்றது.

எம். பி.க்களுக்கும்செனட்டர்களுக்கும் தற்போதுஅளிக்கப்பட்டுள்ளதந்தி சலுகைகள் பொதுவாகத் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக தந்திப் பகுதியைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறினார். எம். பி.க்களுக்குத் தந்தித்தொடர்புகளுக்கான 'அலவன்ஸ்' வழங்கப்படவேண்டும் என்றும் இதனால் உத்தியோகப்பற்றற்ற தந்தித் தொடர்புகளை இல்லாமல் செய்வதுடன் சலுகைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையும் தவிர்க்கலாம் என்று அவர் கருத்துவெளியிட்டார்.

எம். பி.க்களாலும் செனட்டர்காலும் சராசரி ஆயிரம் தந்திகள் ஒவ்வொரு நாளும் பேசப்படுகின்றனவென்றும் தொலைதூரத் தந்தித் தொடர்புகள் அடிக்கடிசிக்கல்அடைவதற்கும், தந்தித்தொடர்புகள் விரைவில் பொதுமக்களுக்குக்கிடைக்காமல் போவதற்கும் இதுவும் ஒரு காரணம் என்றும் அந்த அதிகாரி கூறினர்.

அநேக சந்தர்ப்பங்களில் எம். பிக்கள்பிரத்தியேகத் தந்தித் தொடர்புகள் வைத்துக்கொள்வதன்காரணமாக பொதுமக்கள் கஷ்டங்களுக்குள்ளாகின்றூர்கள். அவர்களுக்கு அவசரமான சமயங்களில் தந்தித் தொடர்புகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. தந்தித்தொடர்புகள் கிடைப்பதில் தயக்கம் ஏற்படும்போது நடத்தப்பட்ட சோதனைகளின்போது எம். பி.க்களும், செனட்டர்களும் 'கியு' வரிசையில் பிரத்தியேகத் தந்தித்தொடர்புகள் 'புக்'பண்ணியிருப்பதுதான் காரணம்என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொதுவாக இந்தத் தொடர்புகள் உத்தியோகரீதியானவை அல்லவென்றும் ஆனால் தந்தியிலாகாவினால் ஒன்றும் செய்யவியலாது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

எம். பி.க்களின் அல்லது செனட்டர்களின் நண்பர்களால் அல்லது சொந்தக்காரர்களால் பொதுவாக பிரத்தியேகத் தந்திகள் பேசப்படுவதாகவும் அவைகளைத் தவிர்ப்பதற்கு வழியில்லை என்றும் கருதப்படுகின்றது. எனவே எம். பி.க்களுக்கும் செனட்டர்களுக்கும் இப்போது இருந்துவரும்தந்தித் தொடர்பு சலுகைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு அதற்குப்பதில் அவர்களுக்கு 'அலவன்ஸ்' வளங்குவது நல்லது என்றும் அந்த அதிகாரி அபிப்பிராயம்கூறினர்

## திருமண அழைப்பு

தெல்லிப்பழை வறுத்தலைவிளானைச் சேர்ந்த திருமதி த. பொன்னம்பலம் அவர்களின் சிரேஷ்ட புதல்வன் விக்கினராஜகுகன் (இலங்கை மீன்பிடிக்கூட்டுத்தாபன கப்பற்றலைவன்) அவர்களுக்கும்மேற்படிஊரைச்சேர்ந்த திரு. சு. நல்லையா (தந்திச் சேவைப் பகுதி அதிபர்) அவர்களின் சிரேஷ்ட புதல்வி கௌரிமனோகரி அவர்களுக்கும் 28-8-66 ஞாயிற்றுக்கிழமை அதுகாலை 1-30 மணிமுதல் 3 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த காலத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் நண்பர்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவரும் பங்குபற்றி மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பாளர்கள்: மணமகனுடைய பெரிய தந்தையார் திரு. க. நாகமுத்து தம்பதிகள். மணமகளுடைய தந்தையார் திரு. சு. நல்லையா தம்பதிகள். 1201

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலை வீதி, 63-ம் [illegible] அச்சகத்தில் 1966-ம் ஆண்டு [illegible] மாதம்26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org